# வினைச்சொல்

# வினைச்சொல்

# பொருளடக்கம்


Title Page
Table Of Contents
A0212 வினைச்சொல்
பாட ஆசிரியரைப் பற்றி (A02121 - 4)
பாட ஆசிரியரைப் பற்றி (A02125 - 6)
பாடம் 1 A02121 வினைச்சொல்லின் பொது இலக்கணம்
பாட அமைப்பு
1.0 பாட முன்னுரை
1.1 வினைச்சொல் - விளக்கமும் பகுப்பும்
1.2 வினை வகைகள்
1.3 வினைப் பொருள்கள்
1.4 வினையின் அடிப்படையில் உருவாகும் பெயர்கள்
1.5 தொகுப்புரை
பாடம் 2 A02122 தன்மை வினைமுற்றுகள்
பாட அமைப்பு
2.0 பாட முன்னுரை
2.1 வினைமுற்று
2.2 தன்மை ஒருமை வினைமுற்று
2.3 தன்மைப் பன்மை வினைமுற்று
2.4 பழங்காலத் தன்மை வினைமுற்று
2.5 தொகுப்புரை
பாடம் 3 A02123 முன்னிலை வினைமுற்றுகள்
பாட அமைப்பு
3.0 பாட முன்னுரை
3.1 முன்னிலை ஒருமை வினைமுற்று
3.2 முன்னிலைப் பன்மை வினைமுற்று
3.3 முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று
3.4 முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று
3.5 வியங்கோள் வினைமுற்று
3.6 தொகுப்புரை
பாடம் 4 A02124 படர்க்கை வினைமுற்றுகள்
பாட அமைப்பு
4.0 பாட முன்னுரை
4.1 படர்க்கை ஆண்பால் வினைமுற்று
4.2 படர்க்கைப் பெண்பால் வினைமுற்று
4.3 படர்க்கைப் பலர்பால் வினைமுற்று
4.4 படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று
4.5 படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று
4.6 தொகுப்புரை
பாடம் 5 A02125 பெயரெச்சம், வினையெச்சம்
பாட அமைப்பு
5.0 பாட முன்னுரை
5.1 எச்சம் - விளக்கம்
5.2 பெயரெச்சம் - விளக்கம்

5.3 பெயரெச்ச வகைகள்
5.4 பெயரெச்ச மரபுகள்
5.5 வினையெச்சம் - விளக்கம்
5.6 வினையெச்ச வடிவங்கள்
5.7 வினையெச்சம் கொண்டுமுடியும் வினைகள்
5.8 வினையெச்ச வகைகள்
5.9 தொகுப்புரை
பாடம் 6 A02126 காலம்
பாட அமைப்பு
6.0 பாட முன்னுரை
6.1 காலம்
6.2 வினைமுற்று காலம் காட்டுதல்
6.3 வினையாலணையும் பெயர் காலம் காட்டுதல்
6.4 பெயரெச்சம் காலம் காட்டுதல்
6.5 வினையெச்சம் காலம் காட்டுதல்
6.6 கால மயக்கம்
6.7 தொகுப்புரை
A02121 தன் மதிப்பீடு : விடைகள் - I
A02121 தன் மதிப்பீடு : விடைகள் - II
A02122 தன் மதிப்பீடு : விடைகள் - I
A02122 தன் மதிப்பீடு : விடைகள் - II
A02123 தன் மதிப்பீடு : விடைகள் - I
A02123 தன் மதிப்பீடு : விடைகள் - II
A02124 தன் மதிப்பீடு : விடைகள் - I
A02124 தன் மதிப்பீடு : விடைகள் - II
A02125 தன் மதிப்பீடு : விடைகள் - I
A02125 தன் மதிப்பீடு : விடைகள் - II
A02126 தன் மதிப்பீடு : விடைகள் - I
A02126 தன் மதிப்பீடு : விடைகள் - II

# A0212 வினைச்சொல்

- A02121 வினைச்சொல்லின் பொது இலக்கணம்
- A02122 தன்மை வினைமுற்றுகள்
- A02123 முன்னிலை வினைமுற்றுகள்
- A02124 படர்க்கை வினைமுற்றுகள்
- A02125 பெயரெச்சம், வினையெச்சம்
- A02126 காலம்

# பாட ஆசிரியரைப் பற்றி (A02121 - 4)



முனைவர்.மா.சற்குணம்

(புனைபெயர் : தமிழறிவன்)

கல்வித்தகுதி : எம்.ஏ, பி.எச்.டி
பணி : இணைப் பேராசிரியர் (Reader)
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க்கல்லூரி,
மயிலம் – 604 304.
படைப்புகள்: இருநூல்கள், ஐம்பதுக்கு மேலான ஆய்வுக் கட்டுரைகள், சில கவிதைகள்



கி.சிவகுமார்

கல்வித்தகுதி : பி.லிட், பி.எட், எம்.ஏ, எம்.எட், எம்ஃபில்
சைவசித்தாந்தம், (பட்டயம்)
சோதிடவியல் (பட்டயம்)
எம்ஃபில் ஆய்வேடு : ‘கந்தர் அலங்காரம்-ஓர் ஆய்வு
பணி : தமிழ் விரிவுரையாளர்,
திரு.கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி,
விருத்தாசலம் – 606001.

# பாடம் 1

## A02121 வினைச்சொல்லின் பொது இலக்கணம்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

எது வினைச்சொல் என்பதை விளக்குகிறது. காலம் உணர்த்துதல் என்னும் கருத்தின் அடிப்படையில் வினைச் சொல் இருவகைப்படும் என வரையறுக்கிறது. முற்று, எச்சம் என வினைச்சொல் இருவகைப்படும் என்பதைச் சுட்டுகிறது.

வினைமுற்றில் விகுதிதான் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்துகிறது என்பதை விளக்குகிறது. வினை வகைகளை அறிவிக்கிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- வினைச்சொல் எது என அறியலாம்.
- தெரிநிலைவினை, குறிப்புவினை என்பன பற்றித் தெரிந்து கொள்ளலாம்.
- வினைகளில் முற்று, எச்சம் என இருவகைகள் இருப்பதை உணரலாம்.
- வினைகளில் திணை, பால் முதலியவற்றை அறிவிப்பன விகுதிகள் என்று அறியலாம்.
- வினை வகைகள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை

1.1 வினைச்சொல் – விளக்கமும், பகுப்பும்

1.2 வினை வகைகள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

1.3 வினைப் பொருள்கள்

1.4 வினையின் அடிப்படையில் உருவாகும் பெயர்கள்

1.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 1.0 பாட முன்னுரை

சொல் இலக்கணம் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பகுத்துப் பேசுகிறது. இவற்றுள் பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் தனித்து இயங்கும் சொற்களாகும். இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பெயர், வினைகளில் ஒன்றைச் சார்ந்தே இயங்குவனவாகும். இவற்றுள் முந்திய பாடத் தொகுதியில் **(co212)** பெயர்ச்சொல் இலக்கணத்தை அறிந்து கொண்டீர்கள். இப்பொழுது, வினைச்சொல் இலக்கணத்தை அறிந்து கொள்ளலாம்.

## 1.1 வினைச்சொல் - விளக்கமும் பகுப்பும்

ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் சொல்லுக்கு வினைச்சொல் என்று பெயர்.

அம்மா அழைக்கிறாள்
பாப்பா வருகிறாள்
என்னும் தொடர்களில் அம்மா, பாப்பா என்னும் பெயர்கள் உயிர் உள்ளவர்களைக் குறிக்கும்.

நிலம் அதிர்ந்தது.
நீர் ஓடுகிறது.
என்னும் தொடர்களில் உள்ள நிலம், நீர் என்னும் பெயர்கள் உயிரற்ற பொருள்களைக் குறிக்கும். ஆகவே, உயிர்ப்பொருள், உயிரற்ற பொருள் ஆகியவற்றின் தொழிலையே வினை என்கிறோம். பொருளின் புடை பெயர்ச்சியே வினை எனச் சுருக்கமாகக் கூறலாம். புடை பெயர்ச்சி என்பது அசைவு என்பதாகும்.

தமிழ்மொழியில் அடிச்சொற்கள் பல பெயர், வினைகளுக்குப் பொதுவாகவே உள்ளன. அலை, காய், பூ முதலியவற்றைச் சான்றாகக் கூறலாம்.

அலை வருகிறது
அலையைப் பார்
இத் தொடர்களில் அலை என்பது பெயர்ச் சொல்லாகும்.

வெயிலில் அலையாதே
ஏன் அலைகிறாய்
இத் தொடர்களில் அலை என்பது வினைச் சொல்லாகும். இவ்வாறு பெயருக்கும், வினைக்கும் பொதுவான சொற்கள் தமிழில் மிகுதியாக உள்ளன என்பதை மட்டும் இப்பொழுது நினைவிற் கொள்க.

- வினைப்பகுப்பு

வினைச்சொல் காலத்தைக் காட்டும்; வேற்றுமை உருபை ஏற்காது.

வினைச்சொல்லைத் தமிழில் தெரிநிலைவினை, குறிப்புவினை என இரண்டாகப் பகுத்திருக்கிறார்கள். தொழிலையும், அது நிகழும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டும் வினைகளைத் தெரிநிலை வினை என்றனர். இவ்வாறு வெளிப்படையாகக் காலத்தைக் காட்டாமல் குறிப்பால் காலத்தைக் காட்டுகின்ற சொற்களைக் குறிப்பு வினை என்றனர்.

எடுத்துக்காட்டு

அவன் வந்தான் – தெரிநிலைவினை
அவன் பணக்காரன் – குறிப்புவினை
இங்கே முதல் தொடரில் வந்துள்ள வந்தான் என்பது, வருதல் என்ற தொழிலையும், அத்தொழில் நிகழ்ந்த இறந்த காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுவதால் தெரிநிலை வினை ஆயிற்று.

இரண்டாவது தொடரில் வந்துள்ள பணக்காரன் என்பது, காலத்தைக் காட்டவில்லை. எனினும் அவன் நேற்றுப் பணத்தை உடையவனாக இருந்தான் என்றோ, இன்று பணத்தை உடையவனாக இருக்கிறான் என்றோ, நாளை பணத்தை உடையவனாக இருப்பான் என்றோ பொருள் தருகிறது. இத்தொடரில் நேற்று, இன்று, நாளை போன்ற சொற்களின் துணைகொண்டு மட்டுமே காலத்தைக் குறிப்பாக அறிய முடியுமாதலால் 'பணக்காரன்' என்பது குறிப்பு வினை ஆயிற்று.

### 1.1.1 தெரிநிலை வினை

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறு பொருள்களைத் தெரிநிலைவினை காட்டும் என்பர் நன்னூலார்.

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே

**(நன்னூல்:319)**

என்பது நன்னூல் நூற்பா.

வரைந்தான் என்னும் வினைச்சொல்லைச் சான்றாக எடுத்துக் கொள்வோம். இதனால் அறியப்படும் ஆறு செய்திகளையும் கீழே காண்க.

வரைந்தவன் – (செய்பவன்) ஓவியன்

வரைய உதவியது – (கருவி) தூரிகை

வரைந்த இடம் – (நிலம்) ஓவியக்கூடம்

வரைதல் – (செயல்) ஓவிய வரைவு

வரையப்பட்டது – (செய்பொருள்) ஓவியம்

வரைந்த காலம் – (காலம்) இறந்தகாலம்

இந்த ஆறு கருத்துகளையும் ஒரு வினைச்சொல் உணர்த்துவதை நினைவிற் கொள்ள வேண்டும்.

வினைச் சொற்களை முற்றுவினை, எச்சவினை என இரண்டாகப் பிரிக்கலாம். எச்சவினையைப் பெயரெச்சம், வினையெச்சம் எனப் பிரிக்கலாம்.

வந்தான் – வினைமுற்று

வந்து - வினையெச்சம் (வந்து என்பதற்குப் பிறகு ஒரு வினைச்சொல் வந்தால்தான் கருத்து நிறைவு பெறும். எ-டு. வந்து போனான்)

வந்த - பெயரெச்சம் (வந்த என்பதற்குப் பிறகு ஒரு பெயர்ச்சொல் வந்தால்தான் கருத்து நிறைவு பெறும். எ-டு. வந்த பையன்)

ஒரு தெரிநிலை வினைமுற்றுச் சொல்லில் பகுதியால் செயலும், விகுதியால் வினை செய்தவரும், இடைநிலையால் காலமும் வெளிப்படையாகப் புலப்படும்.

(எ.கா) செய்தான் – தெரிநிலை வினைமுற்று

செய் – பகுதி – செய்தல் என்னும் வினையைக் குறித்தது.
ஆன் – விகுதி – உயர்திணை ஆண்பாலைக் குறித்தது.
த் – இடைநிலை – இறந்தகாலம் குறித்தது.
பெயரெச்சம் வினையெச்சங்களைப் பற்றி இத் தொகுப்பில் பின் ஒரு பாடத்தில் படிக்க உள்ளீர்கள். இப்பொழுது குறிப்பு வினையைக் குறித்துக் காண்போம்.

## 1.1.2 குறிப்புவினை

குறிப்புவினை என்பது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறனுள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றி, வினை உணர்த்துவதாக அமையும். இது, பேசுவோரின் குறிப்பிற்கேற்பக் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும்.

அவன் பொன்னன் – பொருட்பெயர் (பொன் = பொருள், பொன்னை உடையவன்)
அவன் கச்சியான் – இடப்பெயர் (கச்சி = இடம், கச்சி என்னும் ஊரைச் சேர்ந்தவன்; கச்சி – காஞ்சி மாநகர்)
அவன் ஆதிரையான் – காலப் பெயர் (ஆதிரை = நாள், நட்சத்திரம். ஆதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன்)
அவன் ஆறுமுகன் – சினைப்பெயர் (முகம் – சினை, ஆறுமுகங்களைக் கொண்டவன்)
அவன் கரியன் – குணப்பெயர் (கருமை= நிறப்பண்பு, கரிய நிறம் உடையவன்)
அவன் தச்சன் – தொழிற்பெயர் (தச்சு = தொழில்)
பிற திணை பால்களுக்குரிய குறிப்பு வினைமுற்றுச் சொற்களும் இவ்வாறே அமையும். தனியே பொன்னன், கரியன் எனும் பெயர்கள் குறிப்புவினைகள் ஆகா. தொடரில் இவை பயனிலையாக வரும்பொழுதே குறிப்புவினைமுற்றுகள் ஆகும். ‘பொன்னன் வந்தான்’ என்பதில் ‘பொன்னன்’ எழுவாயாக உள்ளது. ‘அவன் பொன்னன்’ என்பதில் ‘பொன்னன்’ பயனிலையாக உள்ளது. எனவே, இடமறிந்து குறிப்புவினை எது என அறிய வேண்டும்.

குறிப்புவினைச் சொற்கள் பெரும்பாலும் வடிவத்தில் பெயர்ச் சொற்களாகவே தோன்றுவதால், அவை தொடரில் வரும் இடத்தை வைத்தே குறிப்புவினையா என்பதை முடிவு செய்யவேண்டும். தனியே இச் சொற்களைச் சொன்னால் இவை பெயரே ஆகும்.

குறிப்புவினை என்பதும் வினைக்குறிப்பு என்பதும் ஒரே பொருள்படும் சொற்களே ஆகும். குறிப்புவினைச் சொல் வடிவால் காலம் காட்டுவதில்லை. எனவே, காலம் காட்டாது என முடிவு செய்திடலாகாது. பேசுவோர், கேட்போர் குறிப்பிற்கேற்ப, காலத்தை அது குறிப்பாக உணர்த்தும் என்பது நினைவில் இருக்க வேண்டும்.

## 1.2 வினை வகைகள்

வினைச்சொற்கள் முற்று, எச்சம் என்பதாக மட்டுமன்றி, அவை பயன்படுவதன் அடிப்படையில் பலவாகப் பகுத்துரைக்கப்படுகின்றன. அவ்வகையில்,

தன்வினை, பிறவினை;
செய்வினை, செயப்பாட்டுவினை;
உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை
என்பன போன்ற பல வகைப்பாடுகள் உள்ளன.

### 1.2.1 தன்வினை, பிறவினை

தன்வினை என்பது ஒருவர் தானே செய்வது. பிறவினை என்பது பிறரைச் செய்யும்படி ஆக்குவது.

கரையைச் சேர்வான்

என்னும் தொடரில், சேர்தலாகிய தொழிலை ஒருவன் செய்வான் என்பது பொருள்.

கரையில் சேர்ப்பான்
என்பது சொல்லாயின், வேறு யாரையோ அல்லது எதையோ சேரும்படி இவன் செய்வான் என்பது பொருளாகும், முன்னதில் சேரும் வினை இவனுடையது. பின்னதில் அவ்வினை வேறு ஒரு பொருளுக்கு உரியது.

சேர்வான் என்பது தன்வினையாகிறது.
சேர்ப்பான் என்பது பிறவினை ஆகிறது.

தன்வினை – பிறவினை
வருந்துவான் – வருத்துவான் இவற்றில் மெல்லொற்று (ந்,ங்) வல்லொற்றாகிப் (த்,க்) பிறவினை ஆயிற்று.
திருந்தினான் – திருத்தினான்
அடங்கினான் – அடக்கினான்
ஆடினான் – ஆட்டினான் இவற்றில் வல்லொற்று (ட்,ற்) இரட்டித்துப் (ட்ட், ற்ற்) பிறவினை ஆயிற்று.
மாறுவான் – மாற்றுவான்
பிறவினையாகும்போது வி, பி ஆகிய விகுதிகளில் ஒன்று, சேர்ந்து வருவதும் உண்டு.

நட – நடப்பி – நடப்பித்தான்
செய் – செய்வி – செய்வித்தான்
என்பனபோல வரும். சொல் வடிவை விட, அது உணர்த்தும் பொருளை வைத்தே தன்வினையா, பிறவினையா என அறிதல் வேண்டும்.

இனி, செய்வினை, செயப்பாட்டுவினை என்னும் வினைப் பகுப்பினைப் பார்ப்போம்.

### 1.2.2 செய்வினை, செயப்பாட்டுவினை

புத்தகம் படிக்கிறேன்

கொசு கடித்தது
நாயை அடிக்கிறான்
இத்தொடர்களில் உள்ள வினைச் சொற்கள் செய்வினைச் சொற்களாகும். இவற்றை வேறு ஒரு முறையிலும் கூறலாம்.

புத்தகம் (என்னால்) படிக்கப்படுகிறது.
நான் (கொசுவால்) கடிக்கப்பட்டேன்.
நாய் (அவனால்) அடிக்கப்படுகிறது.
இத் தொடர்களில் செயப்பாட்டு வினைகள் உள்ளன. செய்வினையில் படிக்கிறேன் என்றிருந்த சொல், செயப்பாட்டு வினையில் படிக்கப்படுகிறது என மாறுகிறது. படு என்னும் துணைவினைச் சொல் இவை அனைத்திலும் சேர்ந்து வருகிறது.

### 1.2.3 உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை

வருகிறேன், செய்கிறான்
செய்வேன், பெறுவான்
என்பன போன்ற வினைச்சொற்கள் ஒரு வினையைச் செய்வதையோ, செய்யப் போவதையோ அறிவிக்கின்றன. இவற்றை உடன்பாட்டு வினைகள் என்கிறோம். ஒரு செயலைச் செய்வதற்கு உடன்பட்ட நிலையைத்தான் இவை அறிவிக்கின்றன.

வாரேன் (வர மாட்டேன் என்பது பொருள்)
செய்யேன் (செய்ய மாட்டேன் என்பது பொருள்)
செய்யான் (செய்ய மாட்டான் என்பது பொருள்)
பெறான் (பெற மாட்டான் என்பது பொருள்)
என்னும் சொற்கள் ஒருவன் ஒரு தொழிலைச் செய்ய உடன்படா நிலையை (அல்லது) எதிர்மறை நிலையைப் புலப்படுத்துகின்றன. எனவே இவை எதிர்மறைவினைகள் என்று சுட்டப்படுகின்றன. உடன்பாட்டு வினைச் சொற்களின் இடையில் எதிர்மறை இடைநிலை வந்து எதிர்மறைப் பொருளை உணர்த்துகின்றது.

செய் + ஆ + ஆன் – செய்யான்
தெரி + அல் + அன் – தெரியலன்
வந்து + இல் + அன் – வந்திலன்
இச் சொற்களில், ‘ஆ’, ‘அல்’, ‘இல்’ ஆகியன எதிர்மறைப் பொருள் உணர்த்துகின்றன. பெரும்பாலும் எதிர்மறைக்கு ‘ஆ’கார இடைநிலையே வரும். இக்காலத்தில் மாட்டான், மாட்டேன் என்பன போன்ற சொற்களால் எதிர்மறையைக் குறிக்கிறோம்.

சுருங்கச் சொன்னால், எதிர்மறை இடைநிலைகள் வாராத வினைகள் எல்லாம் உடன்பாட்டு வினைகளே. அவற்றைப் பெற்றிருப்பன எதிர்மறை வினைகளாகும்.

வினைமுற்றுச் சொற்களில் எதிர்மறை இருப்பது போன்று பெயரெச்ச, வினையெச்சச் சொற்களோடு ‘ஆ’ சேர்ந்தும் எதிர்மறைப் பொருள்படும்.

செய்ய வந்தேன், செய்து வந்தான் தொடர்களில் இடம்பெற்றுள்ள செய்ய, செய்து என்னும் சொற்கள் தமக்குப் பின் ஒரு வினைமுற்றுச் சொல்லைக் கொண்டே முடிவதால், வினையெச்சம் என்று சொல்லப் பெறுகின்றன.

கேட்கும் செவி, காணும் கண் என்னும் தொடர்களில் உள்ள, கேட்கும், காணும் என்னும் சொற்கள் தமக்குப்பின் ஒரு பெயர்ச்சொல் கொண்டு முடிவதால், அவற்றைப்

பெயரெச்சம் என்கிறோம். இப்பெயரெச்ச, வினையெச்சச் சொற்களும் ‘ஆ’ என்னும் எதிர்மறை இடைநிலை பெற்று வரும்.

கேள் + ஆ – கேளாச் செவி எதிர்மறைப் பெயரெச்சம்
காண் + ஆ – காணாக் கண்

பாராது இருந்தாள் எதிர்மறை வினையெச்சம்
எழுதாமல் இருந்தான்
எனவே, உடன்பாட்டு வினைகளே எதிர்மறை இடைநிலை பெற்று, வினைமுற்றுச் சொற்களிலும் எச்சச் சொற்களிலும் எதிர்மறையை உணர்த்தும் என்பதை அறிக.

### தன் மதிப்பீடு : வினாக்கள் – I

# 1.3 வினைப் பொருள்கள்

வினைமுற்றுச் சொல், அது உணர்த்தும் பொருளுக்கேற்ப, ஏவல், வியங்கோள் முதலிய பெயர்களால் குறிக்கப்பெறும்.

வா, போ என்னும் வினைப் பகுதிகளை, ஒருவரை நோக்கிச் சொல்லும்பொழுது அவற்றை ஏவல் வினை என்கிறோம். அதாவது, ஒருவரை ஒரு வினை செய்யுமாறு கட்டளை இடுவதை ‘ஏவல்’ என்கிறோம்.

இதுபோல், வியங்கோள் வினை, காரண வினை என்னும் வினைகளும் உள்ளன. இவை யாவும் சூழலுக்கேற்ப ஏவல், வியங்கோள் முதலிய பொருள் தருமாறு பேசப்படுகின்றன. இவை குறித்து இனிக் காண்போம்.

## 1.3.1 ஏவல் வினை

வினைப் பகுதியோடு முன்னிலை விகுதி சேர்ந்தே ஏவல் வினை அமையும். இக்காலத்தில் விகுதி இல்லாமலும் பயன்படுத்துகிறோம்.

நீ வாராய்
நீ செல்வாய்
இவற்றுள் வா, செல் என்னும் வினைப் பகுதிகளோடு ‘ஆய்’ என்னும் முன்னிலை ஒருமை விகுதி சேர்ந்துள்ளது.

நீவிர் காண்மின் (காணுங்கள் என்று பொருள்)
நீர் செல்லும்
என்னும் முன்னிலைப் பன்மைச் சொற்களும் அவ்வாறே முன்னிலைப் பன்மை விகுதிகளைப் பெற்றுள்ளன. ‘மின்’, ‘உம்’ என்பன முன்னிலைப் பன்மை விகுதிகளாகும்.

## 1.3.2 வியங்கோள் வினை

‘வியம்’, ‘கோள்’ என்னும் இரு சொற்கள் சேர்ந்தே ‘வியங்கோள்’ வந்தது. ‘வியம்’ என்பதற்கு ஏவல் என்று பொருள். ‘கொள்’ என்பதே ‘கோள்’ என முதல் எழுத்து நீண்டது. ஒருவர் விரும்பிய ஏவலைக் கொள்வது என்பதை வியங்கோளுக்குரிய பொருளாகச் சொல்லலாம். இது, வாழ்த்தல், விதித்தல், வேண்டல், வைதல் என்னும் பொருள்களில் வரும். வியங்கோள், இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் உரியதாக வரும்.

வாழ்க, வெல்க – வாழ்த்தல் பொருள்
வருக, செல்க – விதித்தல் பொருள்
அருள்க, கருணைசெய்க – வேண்டல் பொருள்
வீழ்க, கெடுக – வைதல் (ஏசுதல்) பொருள்
வியங்கோள் வினையில் ஒருமை, பன்மை என்னும் பாகுபாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 1.3.3 காரண வினை

வினையெச்சம் ஒரு வினைமுற்றைக் கொண்டு முடியும் என்பது நமக்குத் தெரியும். சில வினையெச்சங்கள் ஒரு காரணத்தைக் காட்டுவது போல் அமையும். கீழே தரப்பட்டுள்ள தொடர்களில் முன் உள்ள வினையெச்சச் சொற்கள் பின் உள்ள

வினைகளுக்குக் காரணம் ஆகின்றன என்பதைக் காண்க.

மழை பெய்தால் பயிர் வளரும்
மழை பொழிந்ததாயின் குளம் குட்டைகள் நிரம்பும்
மழை பெய்யின் குடிநீர் கிடைக்கும்
மழை பெய்ததெனின் வெப்பம் தணியும்
மழை பெய்ததென்றால் நாடு செழிக்கும்
இத் தொடர்களில் மழை பெய்தல் ஆகிய செயல், பயிர் வளர்தல் போன்றவற்றுக்குக் காரணமாக அமைகிறது என்பது புலப்படுகிறது. இவற்றிலும் ஆல், ஆயின் முதலிய விகுதிகளே (பின்னொட்டுகள்) காரணப் பொருளைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு வரும் வினைகளைக் காரணவினை என்று இக்காலத்தில் குறிப்பிடுகிறார்கள். ஆனால் பழைய இலக்கண நூல்களில் இப்பெயர் இல்லை. இதுவரை வினைச்சொற்களால் சூழலுக்கு ஏற்ப உணர்த்தப்படும் பொருள்கள் சிலவற்றைப் பார்த்தோம்.

## 1.4 வினையின் அடிப்படையில் உருவாகும் பெயர்கள்

வினைச்சொற்களின் அடிப்படையில் பெயர்ச்சொற்கள் பல தோன்றுகின்றன. அப்படித் தோன்றும் சொற்கள், பெயராக இருப்பினும், அடிப்படையில் வினையாக இருந்தவையே என்பதை அப் பெயர்கள் புலப்படுத்தும். வினைச் சொல்லின் அடிப்படையில் தோன்றும் பெயர்களை இருவகைப்படுத்தலாம்.

இவற்றை எடுத்துக்காட்டுகள்வழி தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

### 1.4.1 வினை அடிப்படையில் உருவாகும் பெயர்கள்

ஒரு வினை அடிச்சொல் எந்த மாற்றத்திற்கும் உள்ளாகாமல் அப்படியே பெயராக வருதல் உண்டு. முன்பே கூறியவாறு, தமிழில் உள்ள அடிச்சொற்கள் பல பெயருக்கும், வினைக்கும் பொதுவாக உள்ளன என்னும் கருத்து இங்கு நினையத்தக்கது.

(எ.கா)
கட்டு இரண்டு கட்டுக் கீரை – பெயர்
பூக்களை மாலை கட்டு – வினை
சில சொற்களில் சிறுசிறு மாற்றங்களுடன் வினையிலிருந்து பெயர்ச்சொல் தோன்றக் காணலாம்.

வினை பெயர்
காண் கண்
எழுது எழுத்து
சேர் சேர்மானம்
சுடு சுடர்
குதி குதிரை

### 1.4.2 தொழிற்பெயர்கள்

ஒரு வினையிலிருந்து உருவாகி, அவ்வினையைக் குறிக்கும் பெயராகப் பயன்படுவது தொழிற்பெயர் ஆகும்.

(வினை) ஆடு – ஆட்டம் (பெயர்)
(வினை) வாடு – வாட்டம் (பெயர்)
(வினை) நாடு – நாட்டம் (பெயர்)
(வினை) ஓடு – ஓட்டம் (பெயர்)
தொழிற் பெயர்களில் ஒரு வகை, தொழிலை மட்டுமே உணர்த்தும். அவை காலம் காட்டா. மேற்காட்டிய ஆட்டம், வாட்டம் முதலிய தொழிற்பெயர்கள் தொழிலை (ஆடுதல், வாடுதல்) மட்டுமே உணர்த்தும். உழவு, வரவு (வருகை), பொழிவு முதலியனவும் இத்தகையனவே.

இன்னொரு வகைக்குச் (காலம் காட்டும் தொழிற் பெயர்களுக்கு) சான்று:

தாங்கள் இங்கு வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது.
அவர் இவ்வாறு கூறியது நன்றாக இல்லை. இறந்த காலம்
இத் தொடர்களில் வரும் ‘வந்தது’, ‘கூறியது’ என்னும் சொற்கள் முறையே, வந்த செயல், கூறிய செயல் என்பவற்றையே சுட்டுகின்றன. இவ்வாறு காலம் காட்டும் தொழிற்பெயர்கள் வேறு சிலவும் உண்டு.

இனியும் கூட்டத்தில் பேசிக் கொண்டிருப்பது
நன்றன்று.
அதோ, மழை வந்து கொண்டிருப்பது தெரிகிறதா?

நிகழ்காலம்

### 1.4.3 வினையாலணையும் பெயர்கள்

வினையாலணையும் பெயர்கள் என்பனவும் ஒரு வகையில் தொழிற்பெயர்கள் போன்றவையே. வினையால் அணையும் பெயர் என்பதுவே அச் சொல்லின் இயல்பைப் புலப்படுத்தும். வினைமுற்று, வினைசெய்த கருத்தாவைக் குறிக்க வருவது வினையாலணையும் பெயர் ஆகும்.

வந்தான் (வந்தவன்) நல்லவன்.
வந்தானைப் (வந்தவனைப்) பார்த்தேன்.
வெந்ததை உண்கிறோம்.
இத் தொடர்களில் உள்ள வந்தான், வெந்தது ஆகிய சொற்கள் வினையாலணையும் பெயர்களாகும். வினைமுற்றுச் சொற்கள் வினையாலணையும் பெயர்களாக வருகின்றன.

இவை போன்று வினையாலணையும் பெயர்கள் குறிப்பு வினையிலிருந்தும் அமையும்.

கரியவனைக் கண்டாயா?
கரியானை வரச் சொல்.
என்பன போன்றவை குறிப்பு வினைமுற்றுச் சொற்களில் இருந்து அமைந்தவையே. அஃறிணையிலும் இத்தகு பெயர்கள் அமையும்.

இவ்வாறு, பல்வகையான சொற்கள் வினைச் சொல்லில் இருந்து உருவாகிப் பெயர்களாகப் பயன்படுகின்றன. எனினும் இவை யாவும் வினை இயல்புகளோடு இருப்பது நோக்கத்தக்கது.

## 1.5 தொகுப்புரை

வினைச்சொல்லின் பொது இலக்கணம் என்னும் இப்பாடத்தில் வினைச்சொல் என்றால் என்ன, அதன் இயல்பு யாது என்பது விளக்கப்பெற்றது. தெரிநிலைவினை காலம் காட்டுகிற இடைநிலைகளைப் பெற்று, வெளிப்படையாகக் காலம் காட்டும் என்பதும், குறிப்புவினை குறிப்பாகக் காலம் காட்டும் என்பதும் அறிவிக்கப்பெற்றன.

தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை ஆகிய வினை வகைகள் குறித்து விளக்கம் தரப்பட்டது.

பின்னர், ஏவல், வியங்கோள் ஆகியன பற்றியும், காரணவினை என்பது பற்றியும் விரிவாகக் கூறப்பட்டது.

இறுதியில், வினைச் சொற்களில் இருந்து சிலவகைப் பெயர்ச்சொற்கள் எவ்வாறு அமைகின்றன, அவை எவ்வகை இயல்புகளைப் பெற்றுள்ளன என்பன சுட்டப்பெற்றன. இவ்வாறு வினைச்சொல் பற்றிய செய்திகள் பொது நிலையில் இப்பாடத்தில் விளக்கப்பெற்றன.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் 2

# A02122 தன்மை வினைமுற்றுகள்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

எது தன்மை வினைமுற்று என விளக்குகிறது. தன்மை வினைமுற்றின் வகைகளை அறிவிக்கிறது. தன்மை இடம் என்பதை விகுதிகளே உணர்த்துகின்றன என்கிறது.

பழங்காலத்தில் சில தன்மை வினைமுற்று விகுதிகள் காலமும் உணர்த்தின என்பதைத் தெரிவிக்கிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- பேசுவோரைக் குறிக்கும் வினைமுற்றுகளே தன்மை வினைமுற்றுகள் என அறியலாம்.
- தன்மை வினைமுற்றுகளில் ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவை பால் உணர்த்தா என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.
- வினைமுற்றுகளில் ‘தன்மை’ என்பதை உணர்த்துவன விகுதிகளே என்பதை விளங்கிக் கொள்ளலாம்.
- பழங்காலத்தில் சில தன்மை வினைமுற்று விகுதிகள் ஒருமை, பன்மை என்பவற்றோடு காலமும் உணர்த்தின என்பதை உணரலாம்.

# பாட அமைப்பு

2.0 பாட முன்னுரை

2.1 வினைமுற்று

2.2 தன்மை ஒருமை வினைமுற்று

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

2.3 தன்மைப் பன்மை வினைமுற்று

2.4 பழங்காலத் தன்மை வினைமுற்று

2.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 2.0 பாட முன்னுரை

ஒரு செயலின் முழுமையான (முற்றுப்பெற்ற) தன்மையைக் குறிக்கும் சொல்லையே வினைமுற்று என்கிறோம். ‘முருகன் வந்தான்’ எனும் தொடரில் ‘வந்தான்’ என்பது வினைமுற்று. ‘நீ வருகிறாய்’ எனும் தொடரில் ‘வருகிறாய்’ என்பது வினைமுற்று. ‘நான் வருகிறேன்‘ எனும் தொடரில் ‘வருகிறேன்’ என்பது வினைமுற்று. இம்மூன்று வினைமுற்றுகளிடையே என்ன வேறுபாடு? வந்தான் என்பது பேசப்படுபவனைக் குறிக்கிறது. இது படர்க்கை வினைமுற்று எனப்படும். ‘வருகிறாய்’ என்பது முன்னிருப்பவனைக் குறிக்கிறது. இது முன்னிலை வினைமுற்று எனப்படும். ‘வருகிறேன்’ என்பது பேசுபவனை, அவன் செயலைக் குறிக்கிறது. இது தன்மை வினைமுற்று எனப்படும். தன்னைக் குறிப்பது தன்மை வினைமுற்று. இப்பாடத்தில் தன்மை வினைமுற்றுகள் எவ்வாறு அமைந்துள்ளன, அவை உணர்த்தும் இலக்கண உண்மைகள் யாவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

# 2.1 வினைமுற்று

தமிழ் இலக்கண நூல்களில் வினைமுற்றுகள் பற்றிய செய்திகள் 'சொல்லிலக்கணம்' என்னும் பிரிவில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங்களில் சொல்லதிகாரம் என்னும் பகுதியில் வினைமுற்றுகள் பற்றிக் காணலாம்.

'நான் வந்தேன்' என்பது ஒரு தொடர். இதில் நான் என்பது தன்மை ஒருமை இடப்பெயர். நான் என்பதைத் தொடரமைப்பில் எழுவாய் என்று குறிப்பதுண்டு. தமிழ்த் தொடர்களில் எழுவாய்க்கேற்ற வினைமுற்றுச் சொல்லே வர வேண்டும் என்னும் வரையறை உள்ளது.

நான் வந்தேன்
நீ வருகிறாய்
அவள் வருவாள்
அது வருகிறது
நான், நீ, அவள், அது என வெவ்வேறு இடப்பெயர் எழுவாய்கள் வரும்போது வினைமுற்றுகளும் வெவ்வேறாய் வந்துள்ளன என்பதைக் காண்கிறீர்கள். இது போன்ற செய்திகளைச் சொல்லதிகாரப் பகுதியில் இலக்கண நூலார் உரைத்துள்ளனர்.

## 2.1.1 வினைமுற்றுகளில் தன்மை

தன்மை வினைமுற்று, பேசுபவனுடைய செயலைக் குறிப்பது எனக் கண்டோம். ஒருவர் நம்மிடம் நேராகப் பேசுகிறபொழுது நாம் அவரை ஆணா, பெண்ணா என்று அறிந்து கொள்கிறோம். தொலைபேசியின் வழித் தொடர்பு கொள்ளும் பொழுதும் குரலை வைத்து ஆணா, பெண்ணா எனத் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் எழுத்து வடிவில், தனியாக ஒரு தன்மை வினைமுற்றுச் சொல் (எ.டு : வந்தேன், கண்டேன்) யார், எவர் என முன்பின் தொடர்பு காட்டப்படாதிருந்தால் அச்சொல்லைப் பேசுபவர் ஆணா, பெண்ணா என அறிந்து கொள்ள முடியுமா? நேரிலோ, குரல் வழியாகவோ அல்லாமல் வந்தேன் எனும் தன்மை வினைமுற்று என்ன பால் உணர்த்தும் எனக் கண்டுகொள்ள முடியாது. ஆண்பாலையும் குறிக்கலாம்; பெண்பாலையும் குறிக்கலாம். அஃறிணை ஒருமையையும் குறிக்கலாம். சூழ்நிலையை நோக்கித்தான் பால் கண்டறிய வேண்டியிருக்கும். இதுவே தன்மை வினைமுற்றின் இயல்பு ஆகும். ஆனால் படர்க்கை வினைமுற்று வந்தான், வருகிறாள், வருகிறது எனத் தெளிவாகப் பால் உணர்த்தும். இது படர்க்கை வினைமுற்றின் இயல்பு.

தன்மை வினைமுற்று பால் உணர்த்தாது; எனினும் ஒருமை-பன்மை வேறுபாடு உணர்த்தும். 'வருகிறேன்' என்பது ஒருவரைக் குறிக்கிறது. 'வருகிறோம்' என்பது பலரைக் குறிக்கிறது. இவ்வாறு, ஒருவரா பலரா என்னும் எண்ணிக்கையை மட்டும் இச்சொற்கள் வழி அறியலாம்.

இதுவரை பார்த்தவற்றால், தன்மை வினைமுற்றுகள் வினையை உணர்த்தும் (வருதல், காணுதல்). பேசுவோர் ஒருவரா, பலரா அல்லது ஒரு பொருளா, பல பொருளா என்பதை உணர்த்தும். (ஒருமை-பன்மை) பால் உணர்த்தா (ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்) எனப் புரிந்து கொள்ளலாம். தன்மை வினைமுற்று பால் உணர்த்தாது என்பதும், பால்களுக்குப் பொதுவாக வரும் என்பதும் ஒரே பொருள்தான். (வினைச்சொற்களின் அடிப்படையான இயல்பு காலம் காட்டுதல். இதுபற்றிக் 'காலம்' எனும் பாடத்தில் (a02126) பின்னர் விரிவாகக் காண்போம்.)

### 2.1.2 வினைமுற்றுகளில் விகுதிகள்

தன்மை வினைமுற்றுகளில் தன்மை என்னும் இடத்தையும், ஒருமையா, பன்மையா என்னும் எண்ணிக்கையினையும் உணர்த்தும் உறுப்பை விகுதி என்கிறோம்.

பார்த்தேன் என்பது தன்மை ஒருமை வினைமுற்று.

பார்+த்+த்+ஏன்

பார் என்பது பகுதி

ஏன் என்பது விகுதி

இவற்றுக்கு இடையில் இரு தகர ஒற்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று சந்தி, மற்றொன்று காலம் காட்டும் இடைநிலை, ‘ஏன்’ என்னும் விகுதியால் அறியப்படுவன இரண்டு.

(1) தன்மை (இடம்)
(2) ஒருமை (எண்)

உண்டோம் என்பது தன்மைப் பன்மை வினைமுற்று.

உண்+ட்+ஓம்

இச்சொல்லில் உண் என்பது வினைப்பகுதி

ஓம் என்பது விகுதி.

ட் என்பது இறந்தகால இடைநிலை. இச்சொல்லிலும் ஓம் என்னும் விகுதியால் அறியப்படுவன இரண்டு செய்திகள்.

(1) தன்மை (இடம்)
(2) பன்மை (எண்)

ஆக, தன்மை வினைமுற்றுகளில் விகுதிகளே ஒருமை-பன்மை வேறுபாட்டை உணர்த்துகின்றன என அறிந்து கொள்கிறோம்.

## 2.2 தன்மை ஒருமை வினைமுற்று

தன்மை வினைமுற்றுச் சொற்களை இருவகையாகப் பாகுபடுத்தலாம். இவற்றையே காலம் உணர்த்துவதன் அடிப்படையில், தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என மேலும் இருவகையாகப் பிரிக்கலாம். தெரிநிலை வினைமுற்று – காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது. குறிப்பு வினைமுற்று – காலத்தைக் குறிப்பாகக் காட்டுவது.

இவற்றின் இயல்புகளை அடுத்தடுத்த பிரிவுகளில் முறையே காண்போம்.

### 2.2.1 தெரிநிலை வினைமுற்று

நான் வந்தேன்
நான் வருகிறேன்
நான் வருவேன்
இம்மூன்றும் தன்மை வினைமுற்றுகளே. இவை தமக்குள் எவ்வாறு வேறுபடுகின்றன? இவை உணர்த்தும் காலத்தால் வேறுபடுகின்றன. ‘வந்தேன்’ என்பது இறந்த காலம்; வருகிறேன் என்பது நிகழ்காலம்; வருவேன் என்பது எதிர்காலம். இவ்வினைமுற்றுகளில் காலத்தை உணர்த்தும் உறுப்புகள் எவை எனக் காண்போம்.

வா+ த்+ த் +ஏன்
வா+ கிறு +ஏன்
வா+ வ் +ஏன்
இவற்றில் ‘த்’ இறந்த காலத்தையும், ‘கிறு’ நிகழ்காலத்தையும், ‘வ்’ எதிர்காலத்தையும் உணர்த்துகின்றன. இவை இடைநிலைகள் எனப்படும். இவ்வாறு இடைநிலைகள் அமைந்த வினைமுற்றுகளையே தெரிநிலை வினைமுற்றுகள் என்கிறோம்.

பழந்தமிழில், இப்போது வழக்கில் இல்லாத ஒருவகைத் தன்மை வினைமுற்று இருந்தது. அவ்வினைமுற்று இடைநிலையால் அல்லாமல், விகுதியைக் கொண்டே காலம் உணர்த்தும். இதுபற்றி இப்பாடத்தின் இறுதியில் (2.4.1 & 2.4.2) காண உள்ளோம்.

தன்மை ஒருமை வினைமுற்றுகள் கீழ்வரும் மூன்று பால்களுக்கும் பொதுவாக உரியன.

(1) உயர்திணை ஆண்பால்
(2) உயர்திணைப் பெண்பால்
(3) அஃறிணை ஒன்றன்பால்
இவை பால் உணர்த்தாதனவாய், எண் (ஒருமை, பன்மை) மட்டுமே உணர்த்துவனவாய் வரும் என முன்னர்க் கூறியது நினைவில் இருக்க வேண்டும். இங்கு ஓர் ஐயம் தோன்றக்கூடும். வந்தேன் என்பது உயர்திணை ஆண்பாலையோ பெண்பாலையோ குறிக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. அஃறிணை ஒன்றன்பாலை, அது எப்படிக் குறிக்கும்? விலங்கு, பறவை, மரம் போன்ற அஃறிணைப் பொருட்கள் ‘நான் வந்தேன்’ ‘நாங்கள் வந்தோம்’ என்று பேசுமா என்று நீங்கள் கேட்கலாம். அவை பேசுவதில்லைதான். ஆனால் கதைகளில் இலக்கியங்களில் அஃறிணைப் பொருள்கள் பேசுவது போலவும் பிறர் பேச்சைக் கேட்பது போலவும் வரும் நிகழ்ச்சிகளை நீங்கள் கண்டிருப்பீர்கள். அவ்வாறு வரும்போது அஃறிணைப் பொருள்களையும் தன்மை வினைமுற்று உள்ளடக்கும் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

வந்தேன் இச்சொற்கள் ஆண் – ஒருமை

கண்டேன் பெண் – ஒருமை

சென்றேன் அஃறிணை – ஒருமை

எனும் மூன்று பொருளுக்கும் பொருந்தி வரும்.

இன்றைய வழக்கில் தன்மை ஒருமை வினைமுற்றில் இடம்பெறும் விகுதி ஏன் என்பது மட்டும்தான்.

பேச்சு வழக்கில் என் விகுதி ஏன் விகுதியைப் போல் இடம் பெறுவதில்லை. பழைய இலக்கிய வழக்கில்தான் இது கையாளப் படுகிறது.

(எ.கா)

என் விகுதி வந்தனென்
வருகின்றனென்
வருவென்
அன் என்னும் விகுதியும் தன்மை, ஒருமைக்கு வரும் என்பர் இலக்கண நூலார். அன் படர்க்கையிலும் வரும் ஆதலால், அவ்விடங்களில் வினைமுற்றுடன் உள்ள பெயரை வைத்தே படர்க்கையா, தன்மையா என முடிவு செய்ய வேண்டும்.

(எ.கா)

வந்தனன் யான் – அன் விகுதி – தன்மை இடம்
வந்தனன் அவன் – அன் விகுதி – படர்க்கை இடம்

### 2.2.2 குறிப்பு வினைமுற்று

குறிப்பு வினை என்பது தெரிநிலை வினையைப் போல் வெளிப்படையாகக் காலம் காட்டாது. பேசுவோர் கேட்போர் குறிப்புக்கு ஏற்ப அது காலங்காட்டுவதாகும். காலம் காட்டும் இடைநிலைகள் குறிப்பு வினைமுற்றுச் சொற்களில் இடம் பெறுவதில்லை. விகுதிகளைப் பொறுத்தவரை தெரிநிலை வினையில் வரும் என், ஏன், விகுதிகளே குறிப்பு வினையிலும் வரும். தெரிநிலை வினையிற் போலவே இவை ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால்களுக்குப் பொதுவாக வரும்.

(எ.கா)

நான் கரியென் – என்
நான் கரியேன் – ஏன்
இத் தொடர்களில் கரியென், கரியேன் என்னும் சொற்கள் குறிப்பு வினைமுற்றுகள்.

இவை எவ்வாறு குறிப்பு வினைமுற்றுகள் ஆகின்றன? நான் கரியென் (நான் கரியவன்) எனும் தொடரில் வரும் ‘கரியென்’ என்பதன் பொருள் ‘கரியவனாக இருக்கிறேன்’ என்றோ, கரியவனாக இருந்தேன்’ என்றோ ‘கரியவனாக இருப்பேன்’ என்றோ வரும். சூழ்நிலையை ஒட்டித்தான் காலம் கண்டுபிடிக்க முடியும்.

நான் நேற்றுக் கரியென்

நான் இன்று கரியென்

நான் நாளை கரியென்

எனவரும் தொடர்களில் ‘கரியென்’ எனும் வினைமுற்றின் காலத்தை அதன் முன்னே உள்ள நேற்று, இன்று, நாளை எனும் சொற்களைக் கொண்டு காணமுடிகிறதல்லவா! இவ்வாறு வருவதுதான் குறிப்பு வினைமுற்று.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 2.3 தன்மைப் பன்மை வினைமுற்று

உண்டோம் நாங்கள்
நடக்கிறோம் நாங்கள்

உண்டோம், நடக்கிறோம் எனும் வினைமுற்றுகள் ஒருமை அல்ல, பன்மை என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். பன்மையில் இவை உயர்திணையா அஃறிணையா? இவை இருதிணைக்கும் பொதுவானவை. உண்டோம், நடக்கிறோம் என உயர்திணைப் பொருள்களும் பேசலாம்; ஆடுமாடுகள் போன்ற அஃறிணைப் பொருள்கள் பேசுவதாகவும் இலக்கியம், கதை படைக்கலாம். தன்மை ஒருமை வினைமுற்று ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒருமை ஆகிய மூன்றுக்கும் பொதுவாக இருப்பதை முன்பு கண்டோம். அதுபோலவே தன்மைப் பன்மையும் உயர்திணை அஃறிணை ஆகிய இரண்டுக்கும் பொதுவாக வரும். அதாவது பலர்பால் பன்மைக்கும் (உயர்திணைப் பொருள்கள்) பலவின்பால் பன்மைக்கும் (அஃறிணைப் பொருள்கள்) தன்மைப் பன்மை வினைமுற்று பொதுவாக வரும்.

தன்மை ஒருமை வினைமுற்றைப் போலத் தன்மைப் பன்மை வினைமுற்றும் செயல், காலம், செயல் செய்தவர் என்ற மூன்றைக் குறிக்கும்

(1) வினைப் பகுதி – செயலை உணர்த்தும்

(2) காலங்காட்டும் இடைநிலை – காலம் உணர்த்தும்

(3) விகுதி – செயல் செய்தவர் அல்லது செய்தவைகளைக் குறிக்கும்.
(எ.கா)

உண்டோம்
உண்+ட்+ஓம்

உண் – வினைப்பகுதி
ட் – இறந்தகாலம் காட்டும் இடைநிலை
ஓம் – விகுதி

### 2.3.1 தெரிநிலை வினைமுற்று

தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்று, காலத்தை வெளிப்படையாகக் காட்டும்.

(எ.கா)

பிறந்தோம் – இறந்த காலம் – 'த்' இடைநிலை

வாழ்கிறோம் – நிகழ் காலம் – 'கிறு' இடைநிலை

படிப்போம் – எதிர் காலம் – 'ப்' இடைநிலை
இவ்வாறு இடைநிலைகள் அமைந்த தன்மைப்பன்மை வினைமுற்றுகளே தெரிநிலை வினைமுற்றுகள் ஆகும்.

இவ்வினைமுற்றுச் சொற்களில் தன்மைப் பன்மையை உணர்த்துவன விகுதிகளாகும். இன்றைய தமிழில் ‘ஓம்’ என்னும் விகுதியே தன்மைப் பன்மையைக் குறிக்க மிகுதியாகப் பயன்படுகிறது. ஆனால் பழங்காலத்தில், இந்த ‘ஓம்’ விகுதி குறிக்கும் பொருளில் அம், ஆம், எம், ஏம் ஆகிய விகுதிகளும் பயன்பட்டுள்ளன. (உண்டனம், உண்டாம், உண்டனெம், உண்டேம்) இவை எல்லாச் சொற்களுக்கும் ‘உண்டோம்’ என்பதுதான் பொருள்.

தன்மைப் பன்மையில் தெரிநிலை வினைமுற்றுகள் இவ்வாறு வரும் எனப் பார்த்தோம். அடுத்து, குறிப்பு வினைமுற்றுகள் பற்றிக் காண்போம்.

### 2.3.2 குறிப்பு வினைமுற்று

தன்மை ஒருமைக் குறிப்பு வினைமுற்றுப் பற்றி முன்பு கண்டவற்றை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். பன்மை வினைமுற்றுக்கும் அவ்விலக்கணம் பொருந்தும். பேசுபவரின் குறிப்பு அல்லது தொடரில் உள்ள குறிப்புக் கொண்டு குறிப்பு வினை முற்றின் காலம் இன்னது என உணரலாம்.

‘நல்லோம் யாம்’ என்பது சூழ்நிலையை ஒட்டி நாம் நேற்று நல்லோம், நாம் இன்று நல்லோம், நாம் நாளை நல்லோம் எனப்பொருள் தரும். இவ்வாறு வருவது தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று.

தெரிநிலை வினைமுற்றுச் சொற்களில் தன்மைப் பன்மைக்குக் கூறப்பெற்ற ஐந்து விகுதிகளும் குறிப்பு வினைமுற்றுச் சொற்களிலும் வரும்.

நல்லோம் யாம் – ‘ஓம்’ விகுதி

நல்லம் யாம் – ‘அம்’ விகுதி

நல்லாம் யாம் – ‘ஆம்’ விகுதி

நல்லெம் யாம் – ‘எம்’ விகுதி

நல்லேம் யாம் – ‘ஏம்’ விகுதி

இன்றைய வழக்கில் இருப்பது ‘ஓம்’ விகுதி மட்டுமே.

## 2.4 பழங்காலத் தன்மை வினைமுற்று

முற்காலத்தில் பயன்படுத்தப்பெற்ற சொற்கள் பல இக்காலத்தில் முற்றிலும் வழக்கில் இல்லாமல் போயின. தன்மை வினைமுற்றுச் சொற்களில் இத்தகைய முறையில் வழக்கிழந்தவை சில உள்ளன. இவற்றையே நாம் பழங்காலத் தன்மை வினைமுற்றுகள் எனப் பிரித்துக் கூறுகிறோம்.

தெரிநிலை வினைச்சொற்களில் இடைநிலைகளே காலம் உணர்த்துவது இயல்பு. இதற்கு மாறாக, இங்கு நாம் காணப் போகின்ற தன்மை வினைமுற்று விகுதிகள் காலம் உணர்த்துவனவாக உள்ளன.

இவை இக்காலத்தில் வழக்கில் இல்லை ஆதலால் தெரிந்து கொள்ள வேண்டாம் என நினைத்தல் ஆகாது. பழைய நூல்களைப் படிக்கும்பொழுது இத்தகு சொற்கள் வரும் இடங்களில் பொருள் உணர்வதற்கு இவற்றைத் தெரிந்து கொள்வது தேவையாகிறது. இவ்வகையில், காலம் காட்டும் தன்மை ஒருமை மற்றும் தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகளை இனிக் காண்போம்.

### 2.4.1 ஒருமை வினைமுற்று

தன்மை ஒருமையில் கு, டு, து, று ஆகிய விகுதிகள் காலம் உணர்த்துவனவாகப் பயன்பட்டுள்ளன.

இவற்றுள் கு, து, று என்பன எதிர்காலம் காட்டும் விகுதிகள் விகும்.
'கு' -'உண்கு' யான் – உண்பேன் யான்
என்பது பொருள் எதிர் காலம்
'து' – 'வருது' யான் – வருவேன் யான்
என்பது பொருள்
'று' – 'சேறு' யான் – செல்வேன் யான்
என்பது பொருள்
டு, து, று என்பன இறந்த காலம் குறிக்க வரும் விகுதிகள் ஆகும்.
'டு' – கண்டு யான் – கண்டேன் யான்
என்பது பொருள் இறந்த காலம்
'து' – வந்து யான் – வந்தேன் யான்
என்பது பொருள்
'று' – சென்று யான் – சென்றேன் யான்
என்பது பொருள்

நிகழ்காலப் பொருளில் விகுதிகள் எதுவும் பயன்படவில்லை. பழந்தமிழில் 'அல்' எனும் விகுதியும் தன்மை ஒருமை உணர்த்தும். கு டு து று போல 'அல்' விகுதி தானே காலம் காட்டாது. ஆயினும் எதிர்கால இடைநிலைகளாகிய ப், வ், என்பவற்றோடு மட்டுமே சேர்ந்து வரும். அதாவது அவ்விகுதி இடம்பெறும் தன்மை ஒருமை வினைமுற்று எதிர்காலச் சொல்லாக மட்டுமே இருக்கும்.

(எ.கா)
யான் உண்பல் (நான் உண்பேன்)
யான் வருவல் ( நான் வருவேன்)
இங்கு எடுத்துக் காட்டப்பெற்ற கண்டு, வந்து, சென்று என்பன போன்ற சொற்கள்

இக்காலத் தமிழில் வினை எச்சச் சொற்களாக வரக்கூடியன. அவற்றுக்கும், முற்றுச் சொற்களாக வந்துள்ள இவற்றுக்கும் இடையே சொல் வடிவில் வேறுபாடு இல்லை என்றாலும், பொருளில் வேறுபாடு உள்ளது என்பதை நினைவிற்கொள்க.

## 2.4.2 பன்மை வினைமுற்று

தன்மை ஒருமை விகுதிகளாகக் கூறப்பெற்ற கு, டு, து, று என்பன இறுதியில் மகர ஒற்று ஏற்று கும், டும், தும், றும் என்றாகித் தன்மைப் பன்மை விகுதிகளாகப் பயன்பட்டுள்ளன.

இவற்றுள் டும், தும், றும் என்னும் மூன்றும் இறந்தகாலம் உணர்த்துவன ஆகும்.

(எ.கா).

‘டும்’ – உண்டும் யாம் (உண்டோம் யாம்) இறந்த காலம்

‘தும்’ – வந்தும் யாம் (வந்தோம் யாம்)

‘றும்’ – சென்றும் யாம் (சென்றோம் யாம்)

கும், தும், றும், என்னும் விகுதிகள் மூன்றும் எதிர்காலப் பொருளில் பயன்பட்டுள்ளன.

(எ.கா).

‘கும்’ – உண்கும் யாம் (உண்போம் யாம்) எதிர் காலம்

‘தும்’ – வருதும் யாம் (வருவோம் யாம்)

‘றும்’ – சேறும் யாம் (செல்வோம் யாம்)
நிகழ்காலப் பொருளில் மட்டுமே இவ்விகுதி ஏதும் வரவில்லை என்பது நினையத் தக்கது.

## 2.5 தொகுப்புரை

தன்மை வினைமுற்றுகள் என்னும் தலைப்பிலான இப்பாடத்தில் தன்மை வினை என்பது பேசுவோரின் வினையைக் குறிக்கும் என அறிந்தோம். தன்மை வினைமுற்றுகளில் விகுதிகளே 'தன்மை' எனும் இடப் பொருளையும் ஒருமை/ பன்மையையும் உணர்த்துகின்றன என்று தெரிந்து கொண்டோம். தன்மை வினைமுற்றுகளில் ஒருமை பன்மை வேறுபாடுகளே உண்டு. இவை திணை, பால் உணர்த்தா என்பதும் வெளிப்படை. இவற்றுக்குரிய சில காலங்காட்டும் விகுதிகளைப் பற்றியும் அறிந்து கொண்டோம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் 3

# A02123 முன்னிலை வினைமுற்றுகள்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

முன்னிலை வினைமுற்று பற்றி அறிவிக்கிறது. முன்னிலை வினைமுற்றுகளில் ஒருமை பன்மைக்குத் தனித்தனி விகுதிகள் உள்ளன என்பதைச் சுட்டுகிறது. தெரிநிலை, குறிப்பு ஆகிய இருவகை வினைமுற்றுகளுக்கும் பொதுவாக விகுதிகளில் மாற்றம் இல்லை என்பதைத் தெரிவிக்கிறது. ஏவல் வினை பற்றிப் புலப்படுத்துகிறது. வியங்கோள் வினை பற்றி விவரிக்கிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- ஐ, ஆய், இ ஆகியன முன்னிலை ஒருமைக்குரிய விகுதிகளாக வினைமுற்றுச் சொற்களில் இடம்பெறுகின்றன என்பதை அறியலாம்.
- இர், ஈர் என்னும் இரண்டும் முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் எனத் தெரியலாம்.
- ‘மின்’ என்பது முன்னிலைப் பன்மையில் ஏவல் பொருளில் பயன்படுகிறது என்பதை உணரலாம்.
- க, ய என்பன வியங்கோள் வினைமுற்று விகுதிகளாகப் பயன்படுகின்றன என்று தெரிந்து கொள்ளலாம்.
- ‘ர்’ என்பது யகரத்தோடு சேர்ந்து வியங்கோள் வினையில் வருவதையும் அறிந்து கொள்ளலாம்.

## பாட அமைப்பு

3.1 முன்னிலை ஒருமை வினைமுற்று

3.2 முன்னிலைப் பன்மை வினைமுற்று

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

3.3 முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று

3.4 முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று

3.5 வியங்கோள் வினைமுற்று

3.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 3.0 பாட முன்னுரை

தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன மூவிடப் பெயர்கள். இப்பெயர்களுடன் அமையும் தொடர்கள் இவற்றுக்கேற்ற வினைமுற்றுகளைப் பெற்றிருக்கும். இவற்றுள் தன்மை வினைமுற்றுகள் பற்றி முந்திய பாடத்தில் தெரிந்து கொண்டீர்கள். இந்தப் பாடத்தில் முன்னிலை வினைமுற்றுகள் பற்றிக் காண்போம். வந்தாய், சொல்கிறாய், செல்வாய் என்பன போன்ற வினைமுற்றுச் சொற்கள் முன்னிலையில் உள்ள ஒருவருடன் பேசும்போது இடம் பெறுவனவாகும். இவை எவ்வாறு தொடர்களில் வருகின்றன, இவ் வினைமுற்றுகளின் வகைகள் யாவை, விகுதிகள் யாவை என்பன போன்றவற்றை இப்பாடத்தில் விரிவாக அறியலாம்.

## 3.1 முன்னிலை ஒருமை வினைமுற்று

ஒரு செய்தியை யாரோடு பேசுகிறோமோ அவரை ‘முன்னிலை’ என்னும் சொல்லால் கூறுகிறோம். அல்லது ‘முன்னிலை’ என்னும் சொல் தமிழ் இலக்கணத்தில் கேட்பவரைக் குறிக்கும் ஒரு கலைச்சொல் எனலாம். மூவிடப் பெயர்களைக் கீழ்வருமாறு எளிமையாக நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

தன்மை எனும் சொல் பேசுபவரைக் குறிக்கும்.

முன்னிலை எனும் சொல் கேட்பவரைக் குறிக்கும்.

படர்க்கை எனும் சொல் பேசப்படுபவரைக் குறிக்கும்.

முன்னிலை வினைமுற்று என்பது ஒரு தொடரில் பயனிலையாக வருவதாகும்.

நீ வந்தாய்

நீ உண்கிறாய்

நீ செல்வாய்

எனும் தொடர்களில் உள்ள வினைமுற்றுச் சொற்கள் முன்னிலை வினைமுற்றுகள் ஆகும்.

முன்னிலை வினைமுற்றுச் சொற்கள் கீழ்க்காணும் விளக்கங்களைத் தருவனவாக அமையும். செயல் (வினை), காலம், இடம், எண் ஆகியன குறித்து அச்சொல் அறிவிக்கும் என்பதை ஓர் எடுத்துக்காட்டின் வழிக் காண்போம். வந்தாய் என்னும் முன்னிலை வினைமுற்றுச் சொல் வருதல் ஆகிய செயலையும் இறந்த காலத்தையும் முன்னிலையில் ஒருவரையும் சுட்டுகிறது.

முன்னிலை வினைமுற்றுச் சொற்கள் தன்மை வினைமுற்றுச் சொற்களைப் போன்றே திணை, பால் ஆகியவற்றைத் தெரிவிப்பதில்லை. ‘வந்தாய்’ என்னும் சொல் எதிரில் உள்ள ஒருவரை மட்டும் குறிக்கிறதே தவிர அவர் உயர்திணையா அல்லது அஃறிணையா என்பதையோ, அவர் ஆணா அல்லது பெண்ணா என்பதையோ தெரிவிப்பதில்லை. எதிரில் உள்ள ஒரு மனிதரைப் பார்த்தும் ‘வந்தாய்’ எனப் பேசலாம். எதிரில் உள்ள அஃறிணைப் பொருளாகிய ஒன்றனைப் பார்த்தும் பேசலாம். சான்றாக ஒரு நாயைப் பார்த்தும், ‘நீ இவ்வளவு நேரம் எங்கே போய் இருந்தாய்? எப்பொழுது இங்கு வந்தாய்?’ என்பன போலப் பேசலாம். அதே போல வந்தீர் என்னும் முன்னிலை வினைமுற்று உயர்திணையைக் குறிக்கவும் வரலாம்; அஃறிணையைக் குறிக்கவும் வரலாம். ஆகவே, முன்னிலை வினைமுற்றுச் சொற்கள் திணை, பால் உணர்த்தாமல் ஒருமை, பன்மை என்பவற்றுள் ஒன்றை மட்டும் உணர்த்தும் என்பதை அறிய வேண்டும்.

முன்னிலை வினைமுற்றுச் சொற்களைக் கீழ்வருமாறு பகுக்கலாம். இவ் அடிப்படையில் முன்னிலை ஒருமை வினைமுற்றுச் சொற்கள் குறித்து முதலில் அறிந்து கொள்வோம்.

### 3.1.1 தெரிநிலை வினைமுற்று

முன்னிலை ஒருமை வினைமுற்றுச் சொற்களில் காலத்தை வெளிப்படையாக அறிவிக்கும் சொற்களைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள் என்கிறோம்.

வந்தாய் என்பது இறந்தகாலம் காட்டுகிறது.
வருகிறாய் என்பது நிகழ்காலம் காட்டுகிறது.
வருவாய் என்பது எதிர்காலம் காட்டுகிறது.

இச்சொற்களில் ‘வா’ என்னும் வினைப்பகுதிக்கும் ‘ஆய்’ என்னும் முன்னிலை ஒருமை விகுதிக்கும் இடையில் காலம் காட்டும் இடைநிலைகள் உள்ளன. முறையே த், கிறு, வ் என்பன (மேற்காணும் மூன்று சொற்களிலும்) மூன்று காலங்களையும் உணர்த்துகின்றன. இவற்றைப் பற்றி விரிவாகப் பின்னர் காலம் (a02126) என்னும் பாடத்தில் படிக்க உள்ளீர்கள்.

முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினைமுற்று விகுதிகளாக இ, ஐ, ஆய் என்பன உள்ளன. இவற்றுள் ஆய் என்னும் விகுதியே இக்காலத்தில் பெருவழக்காக உள்ளது.

நீ படித்தாய் ஓடினாய்
நீ நடந்தாய் உழுதாய்
நீ உண்டாய் சொன்னாய்
நீ சென்றாய் வந்தாய்

முதலிய சொற்களில் எல்லாம் ‘ஆய்’ விகுதி இருப்பதை அறிக. இவற்றைப் போல, பழங்காலத்தில் இகர விகுதியும் பயன்பட்டுள்ளது. ஒரு சான்று:

சென்றி என்பது இறந்தகாலம் உணர்த்தும் வினைமுற்று. இதற்குச் சென்றாய் என்று பொருள்.

செல்லாநின்றி என்பது நிகழ்காலம் உணர்த்துகிறது. ‘செல்’ என்னும் பகுதியோடு ஆநின்று என்னும் நிகழ்கால இடைநிலையும் ‘இ’கர விகுதியும் சேர்ந்துள்ளது. எனவே, இச்சொல் செல்கிறாய் என்னும் பொருளுடையதாகும்.

சேறி என்னும் தெரிநிலை வினைமுற்று ‘செல்வாய்’ என்னும் பொருளுடையது. இது எதிர்காலம் உணர்த்துவது. சென்றி, சொல்லாநின்றி, சேறி ஆகிய தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள் இக்காலத்தில் வழக்கில் இல்லை. ஆதலால் இவற்றின் பொருள்களை நினைவிற்கொள்ள வேண்டும். இகர விகுதியைப் போல் ‘ஐ’கார விகுதியும் முன்னிலையில் வரும்.

உண்டனை என்பது இதற்குச் சான்று. இது உண்டாய் என்னும் பொருளுடையது. இதுபோல் நிகழ்காலம் குறிப்பதாக இவ்விகுதி உண்கின்றனை என்று வருவதும் காண்க.

இதுவரை கூறியவற்றால் ஐ, ஆய், இ என்னும் மூன்று விகுதிகளும் முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்களில் வருகின்றன என்பது தெளிவாகும்.

### 3.1.2 குறிப்பு வினைமுற்று

காலத்தைக் குறிப்பாக உணர்த்துபவை குறிப்பு வினைமுற்றுகள் (காண்க: பாடம் 2.2.2). முன் சொன்ன ஐ, ஆய், இ எனும் மூன்று விகுதிகளும் முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்றுச் சொற்களிலும் விகுதிகளாக வருகின்றன.

நீ நல்லாய் – ஆய் விகுதி
இவை முன்னிலை
ஒருமையில் ஆண்பால் ஒருமை, பெண்பால் ஒருமை, அஃறிணை
ஒன்றன்பால் ஆகிய

மூன்றையும் குறிக்கும்.

நீ நல்லை – ஐ விகுதி
நீ அருளி – இ விகுதி
‘நல்லை’ என்னும் சொல் முன்னிலையில் இருக்கும் ஆண் ஒருவரையோ, பெண் ஒருவரையோ, அல்லது அஃறிணைப் பொருள் ஒன்றையோ குறித்துப் பேசுவதாக அமையும். நீ நல்ல இயல்பை உடையாய் எனும் பொருள் தருவதாக ‘நல்லை’ என்னும் சொல் குறிப்பு வினையில் பயன்படுகிறது. ‘அருளி’ என்பது ‘அருள் உடையவன் நீ’ என்று பொருள்படும்.

ஓர் ஆணைப் பார்த்தும் ‘நல்லாய்’ எனக் கூறலாம்.
ஒரு பெண்ணைப் பார்த்தும் ‘நல்லாய்’ எனக் கூறலாம்.
ஒரு நாய் போன்ற அஃறிணை உயிரைப் பார்த்தும் இவ்வாறு கூறலாம்.
குறிப்பு வினை இம் மூன்றற்கும் உரியது.

மேற்கண்டவற்றால் தெரிநிலை வினை, குறிப்பு வினை எனும் இரண்டிற்கும் முன்னிலை ஒருமைக்குரிய விகுதிகளாக ஐ, ஆய், இ எனும் மூன்றும் வருகின்றன என்பது விளங்கும். இவற்றுள் ஆய் விகுதி இன்றைய வழக்கில் உள்ளது என்பதும், ஐ, இ ஆகிய விகுதிகள் முற்கால வழக்குகள் என்பதும் நினைவிற்கு உரியன.

## 3.2 முன்னிலைப் பன்மை வினைமுற்று

முன்னிலைப் பன்மை வினைமுற்றுகள் என்பன உயர்திணைப் பலர்பாலுக்கும், அஃறிணைப் பலவின் பாலுக்கும் உரியனவாகும். ஏனைய வினைச் சொற்களைப் போல இவையும் தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும். இவற்றுள் தெரிநிலை வினைமுற்றுகள் பற்றி முதலில் காண்போம்.

### 3.2.1 தெரிநிலை வினைமுற்று

பார்த்தீர்கள்
பார்க்கிறீர்கள்
பார்ப்பீர்கள்
என்பன முன்னிலைப் பன்மை தெரிநிலை வினைமுற்றுகளுக்குச் சான்றுகளாகும். இவ் வினைமுற்றுகள் பலரைப் பார்த்தும் பேசப்படலாம். அஃறிணையில் பலவற்றை நோக்கியும் பேசப்படலாம்.

முன்னிலைப் பன்மைக்குரிய வினைமுற்று விகுதிகள் இர், ஈர் என்பனவாகும். இதனை

இர் ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப் பன்மை முன்னிலை என நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் (நூற்பா 336) கூறியுள்ளார்.

இன்றைய வழக்கில் நிற்கிறீர்கள், பேசினீர்கள் என்பன போல ரகர ஒற்றும், கள் விகுதியும் சேர்த்துப் பேசும் முறையே மிகுதியாக உள்ளது. இவை முன்னிலைப் பன்மை வினைமுற்றுகளாகும். இதே பொருளில் இந்த வினைமுற்றுகள் முற்காலத்தில் இர், ஈர் என்னும் விகுதிகளை மட்டும் பெற்றிருந்தன.

'வந்தீர்கள்' என்னும் இன்றைய வழக்கு முற்காலத்தில் 'வந்தீர்' என்று இருந்தது. இது இறந்தகாலம் உணர்த்துவது. இதுவே, நிகழ்காலப் பொருளில் வருகிறீர் அல்லது வருகின்றீர் என்பதாக வரும். எதிர்காலம் உணர்த்தும் பொழுது இச்சொல் 'வருவீர்' எனக் கூறப்படும்.

வேறு சில சான்றுகளைக் காண்போம்.

நீர் உண்டீர் – 'ட்' இடைநிலை – இறந்தகால வினைமுற்று
நீர் உண்கின்றீர் – 'கின்று' இடைநிலை – நிகழ்கால வினைமுற்று
நீர் உண்பீர் – 'ப்' இடைநிலை – எதிர்கால வினைமுற்று
மேற்காட்டப் பெற்ற 'ஈர்' விகுதியைப் போல முன்னிலைப் பன்மை தெரிநிலை வினையில் 'இர்' விகுதியும் வழங்கி வந்தது. இப்பொழுது இர் விகுதி மிகுதியும் வழக்கில் இல்லை.

நீர் உண்டனிர் – (இர் விகுதி) – இறந்த காலம்
நீர் உண்கின்றனிர் – (இர் விகுதி) – நிகழ் காலம்
நீர் உண்பிர் – (இர் விகுதி) – எதிர் காலம்
இவை முறையே உண்டீர்கள், உண்கிறீர்கள், உண்பீர்கள் என்னும் பொருள் உடையன. எனவே, முன்னிலைப் பன்மையில் தெரிநிலை வினைமுற்று விகுதிகளாக இர், ஈர் என்பன வரும் என இதுவரை பார்த்தோம். இவற்றில் உள்ள ரகர ஒற்றுதான் பன்மை உணர்த்துகிறது என்னும் உண்மை நினைவிற்கு உரியது.

### 3.2.2 குறிப்பு வினைமுற்று

முன்னிலைப் பன்மைக்கு உரிய குறிப்பு வினைமுற்றுச் சொற்கள், தெரிநிலை வினைக்குக் கூறப்பெற்ற இர், ஈர் என்னும் விகுதிகளையே பெற்று வரும். நீங்கள் நல்லவர்கள் என்னும் தொடரில் உள்ள நல்லவர்கள் என்னும் சொல் குறிப்பு வினைமுற்றுச் சொல் ஆகும். இப்பொருளில் வரும் நல்லீர் என்னும் சொல் ஈர் விகுதி பெற்றுள்ளது. புதுமையீர் என்பதும் இத்தகையதே. இவ் வினைமுற்றுச் சொற்கள் எந்த ஒரு காலத்தையும் வெளிப்படையாகக் காட்டவில்லை என்பதைக் காண்க.

இர் விகுதியும் இதுபோல் வரும். நீவிர் நெட்டையிர் (நீங்கள் நெடியவர்கள்), நீவிர் இன்சொல்லிர் (நீங்கள் இனிய சொற்களுக்குரியவர்கள்). இத்தொடர்களில் முன்னிலைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று விகுதியாக இர் விகுதி வந்துள்ளது. இர், ஈர் என்னும் இக்குறிப்பு வினைமுற்று விகுதிகள் உயர்திணையில் பலரையும், அஃறிணையில் பலவற்றையும் உணர்த்தக் கூடியனவாகும்.

### 3.2.3 படர்க்கையை உளப்படுத்தும் முன்னிலைப் பன்மை வினைமுற்று

ஒருவரையோ பலரையோ நோக்கி நீங்களும், அவர்களும் வந்தீர்கள் எனப் பேசுவதுண்டு. இதில் நீங்கள் என்பது முன்னிலையைக் குறிக்கும். அவர்கள் என்பது படர்க்கையைக் குறிக்கும். இருசாராரையும் சேர்த்துக் குறிக்க வந்தீர்கள் என்னும் சொல்லையே பயன்படுத்துகிறோம். வந்தீர்கள் எனும் இவ்வினைமுற்று முன்னிலையாரோடு, படர்க்கையாரையும் உள்ளடக்குவது. படர்க்கையாரையும் முன்னிலையாரோடு உளப்படுத்திச் சேர்த்துக் கூறுவதால், இது படர்க்கையை உளப்படுத்தும் முன்னிலைப் பன்மை என்று பெயர் பெறும்.

இவ்வாறு பழங்காலத்தில் உண்டீர் நீர் என்று கூறினர். இத்தொடரில் உள்ள 'நீர்' என்பதற்கு நீயும் அவனும் அல்லது நீயும் அவளும் அல்லது நீயும் அதுவும் என்னும் பொருளாகும். 'உண்டீர்' என்பது முன்னிலையில் உள்ளவரையும் படர்க்கையில் உள்ளவரையும் சேர்த்துச் சுட்டும் வினைமுற்றாகும்.

இதுபோன்று வரும் இன்னொரு சொற்றொடர்.

உண்டனிர் நீவிர். (நீவிர் = (நீயும், அவனும்) என்பது. ஏவல் நிலையிலும் இவ்வாறு வரும்.

சான்று:

உண்மின் நீர் என்பதற்கு உண்ணுங்கள் நீங்கள் என்று பொருள். இத்தொடரிலும் நீர் என்பதற்கு நீயும், அவனும் என்று பொருள் கொள்ளலாம்.

மேற்காணும் தெரிநிலை வினைமுற்றுகளைப் போன்று குறிப்பு வினைமுற்றுச் சொற்களும் வருதல் உண்டு.

'நல்லீர் நீர்' என்னும் தொடரில் நல்லீர் என்பது குறிப்பு வினைமுற்று. நீயும் அவனும் நல்லவர்கள் என்பது இத்தொடருக்குரிய பொருள். அதாவது கேட்போரையும், பேசப்படுபவரையும் சேர்த்து நீர் என்று ஒரே சொல்லால் குறிக்கிறோம். இவ்வாறு இச்சொல்லுக்குப் பொருள் கூறுவது இடச் சூழலுக்கு ஏற்பவே அமையும். முன்னிலைப் பலரை 'நீர்' என்ற சொல்லால்தான் குறிக்கிறோம். முன்னிலை, படர்க்கை ஆகிய இரு

இடங்களில் உள்ளவர்களையும் நீர் என்னும் சொல்லாலேயே குறிக்கிறோம். எனவே இடத்திற்கேற்பவே இப் பெயர்ச்சொல்லும், இதற்குரிய வினைமுற்றுச் சொல்லும் பொருள் கொள்வதற்கு உரியன.

இதுவரை முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை ஆகியவற்றுக்குரிய தெரிநிலை வினைமுற்றுகளும், குறிப்பு வினைமுற்றுகளும் எவ்வாறு அமைகின்றன எனப் பார்த்தோம். இவற்றுக்குரிய வினைமுற்று விகுதிகளையும் தெரிந்து கொண்டோம். தன் மதிப்பீட்டு வினாக்களுக்கு விடை தேடுவதன் மூலம் மீண்டும் இவற்றை நினைவுபடுத்திக் கொள்க.

### தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.3 முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று

முன்னிலையில் உள்ள ஒருவரை நோக்கி 'நீ இச்செயலைச் செய்வாயாக' என ஏவினால், அவ் ஏவலை வெளிப்படுத்தும் சொல்லுக்கு ஏவல் வினை என்று பெயர்.

ஏவல் வினை தெரிநிலையில் மட்டும் உண்டு. குறிப்புவினையில் இல்லை. எனவே, 'ஏவல்' என்பது ஒரு வினைப் பகுதியானது விகுதி பெற்றோ, பெறாமலோ அமையும் சொல் எனலாம்.

பெரும்பாலும் ஏவல் வினைமுற்றுகள் 'ஆய்' விகுதி பெற்று, இலக்கிய வழக்கில் வருகின்றன.

வாராய் = வா
சொல்லாய் = சொல்
பாடாய் = பாடு

என்பன போல அமையும். முன்னிலை ஒருமை விகுதியாகிய ஆய் என்பதைப் பெறாமல் வா, சொல், உண் என்பன போலப் பகுதி மாத்திரமே நிற்கும் வினைச் சொற்களும் ஏவல் ஒருமை வினைமுற்றுகளேயாகும். பேச்சு வழக்கில் ஏவல் ஒருமைச் சொற்கள் பெரும்பகுதி விகுதி இல்லாமல் வருவதையே காணலாம்.

இவ்வாறன்றி ஆய், இ, அல், ஏல், ஆல் முதலிய விகுதிகளைப் பெற்றும் ஏவல் ஒருமை வினைமுற்றுச் சொற்கள் வருவதுண்டு.

வாராய் – (வருவாய்) – ஆய் விகுதி
சேறி – (செல்லுதி = செல்) – இ விகுதி

வாரல் – (வரவேண்டாம்) – அல் விகுதி எதிர்மறைப் பொருளில் அமைந்தன
திறவேல் (திறக்க வேண்டாம்) – ஏல் விகுதி
அழால் (அழ வேண்டாம்) – ஆல் விகுதி
ஏவல் வினை எதிர்காலத்துக்கு உரியது

### 3.3.1 பகுதி மட்டும் வரும் ஏவல்வினைமுற்று

விகுதி இல்லாமல் தெரிநிலை வினைப்பகுதி மட்டும் வந்து ஏவல் வினைமுற்றுகள் அமைவதுண்டு. பெரும்பாலும் இக்காலப் பேச்சு வழக்கில் இவ்வாறுதான் ஏவல் வினை அமைகிறது எனலாம்.

முன்னிலை ஒருமை ஏவலில் பொதுவாக வா, போ, இரு, உண், பார் என்பன போன்ற வினைப்பகுதிகளைத்தான் பெரும்பாலும் பேசுகிறோம். 'நீ வா' என்பதற்குப் பதிலாக 'வா' என்று மட்டும் எதிரில் இருப்பவரை நோக்கிக் கூறும் பொழுது 'நீ' என்னும் எழுவாய் தோன்றா எழுவாயாக மறைந்திருக்கிறது. அதாவது கேட்பவரால் 'நீ' என்னும் சொல் தானாக உணரப்படுகிறது.

நன்னூல் பதவியலில் கூறப்படும் பகுபத உறுப்புகள் பற்றிய செய்திகளில் 'நட, வா, மடி, சீ, விடு, கூ' என்று தொடங்கும் நூற்பாவில் (நன்னூல்:136), 'செய்' என்னும் பொது ஏவல் வாய்பாட்டில் அமைந்த வினைப் பகாப்பதங்களை 23 மாதிரிகளாகப் பட்டியல் இட்டுள்ளார் நூலாசிரியர். தமிழில் உள்ள அனைத்து வினைப்பகுதிகளையும் இந்த 23 மாதிரிகளுள் அடக்கலாம்.

வா, போ போன்ற ஏவல் சொற்களில் விகுதி இல்லை என்றாலும், முன்னிலை ஏவல் விகுதி சேர்ந்து கெட்டிருப்பதாகவே கொள்வர்.

முன்னிலை இடத்தில் இவ்வாறு கட்டளைப் பொருளில் வரும் ஏவல் வினைமுற்றுச் சொற்கள், ஒருமை பன்மைக்கேற்ப, தனித் தனி விகுதிகளைப் பெற்று வரும். இவற்றுள், ஏவல் ஒருமை வினைமுற்றுகள் பற்றி இதுவரை பார்த்தோம்.

## 3.4 முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று

முன்னிலையில் உள்ள பலரை நோக்கிக் கட்டளைப் பொருளில் வரும் வினைச் சொற்கள் முன்னிலை ஏவல் பன்மை வினைமுற்றுகள் எனப்படும். இவை இர், ஈர், மின் எனும் விகுதிகளைப் பெற்று வரும்.

உண்ணிர் = (உண்ணுங்கள்)

உண்ணீர் = (உண்ணுங்கள்)

காப்பீர் = (காத்து இருங்கள்)

காண்மின் = (காணுங்கள்)

சென்மின் = (செல்லுங்கள்)

என்பன போன்று இவ்விகுதிகள் வினைப் பகுதியோடு சேர்ந்து வரும்.

செய்யும் என்னும் வாய்பாட்டில் அமைந்த வினைச்சொற்களும் முன்னிலைப் பன்மை ஏவலுக்குப் பயன்படுகின்றன.

நீர் செய்யும், கேளும்
நீர் வாரும், எழுதும்
நீர் உண்ணும், சொல்லும்

என்பன போன்று இச்சொற்கள் அமையும். இக்காலத்தில் செய்யும் எனும் சொல்லோடு கள் விகுதி சேர்த்துச் செய்யுங்கள் என்பது போல் வருவதே பெரும்பான்மை.

நீங்கள் செய்யுங்கள்
நீங்கள் தாருங்கள்
நீங்கள் பாருங்கள்

என்பன போல இச் சொற்கள் ஆளப்படுகின்றன.

## 3.5 வியங்கோள் வினைமுற்று

வியம் என்பதற்கு ஏவல் அல்லது கட்டளை என்று பொருள். வியத்தை (அல்லது) ஏவுதலைக் கொள்வது ஆகையால் இச்சொல் வியங்கோள் எனப்பட்டது. வியங்கோள் வினைமுற்று மிகப் பழங்காலத்தில் இருந்தே வழக்கில் இருந்து வருகிறது. இது எவ்வெப் பொருள்களில் வரும், இதற்குரிய விகுதிகள் யாவை என்பன குறித்து இனித் தெரிந்து கொள்வோம். இறுதியில் வியங்கோளுக்கும் ஏவல் வினைக்கும் உள்ள வேறுபாடுகளையும் தெரிந்து கொள்ளலாம்.

### 3.5.1 வியங்கோள் பொருள்கள்

வியங்கோள் வினை பெரும்பாலும் நான்கு பொருள்களில் பயன்படுத்தப்பெறுகிறது. அவை வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் ஆகியவையாம். இச்சொல் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் உரியதாகப் பயன்படுத்தப்பெறுகிறது.

வெல்க, வாழ்க – வாழ்த்தல் பொருள்
வீழ்க, ஒழிக – வைதல் பொருள்
வருக, உண்க – விதித்தல் பொருள்
அருள்க, கருணைபுரிக – வேண்டல் பொருள்
இவற்றை முன் குறிப்பிட்டவாறு வாழ்க நான், வாழ்க நீ, வாழ்க அவன் என்பன போன்று ஐம்பால் மூவிடத்திற்கும் பயன்படுத்தலாம்.

### 3.5.2 வியங்கோள் வினைமுற்று விகுதிகள்

க, ய என்கிற இரு உயிர்மெய் எழுத்துகளும் ரகர ஒற்றை இறுதியில் பெற்ற இய, இயர் என்பன போன்ற விகுதிகளும் வியங்கோளில் மிகுதியும் வரும்.

வருக, வாழிய, வாழியர் என்பன அதற்குச் சான்றுகள்.

- எதிர்மறை வியங்கோள்

உடன்பாட்டுப் பொருளில் வியங்கோள் வருவது போன்று எதிர்மறைப் பொருளிலும் இது கையாளப் பெறுவதுண்டு.

வாரற்க, கூறற்க, செல்லற்க
வாரல், செல்லல், பகரேல்
என்பன போன்று இச்சொற்கள் அமையும்.

இந்நிலையில் ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் இரண்டும் ஒன்றுபோல் உள்ளதால் குழப்பமும், மயக்கமும் ஏற்படும்.

### 3.5.3 ஏவல் – வியங்கோள் வேறுபாடுகள்

ஏவல் :

கட்டளைப் பொருளில் மட்டும் வரும்.

முன்னிலைக்கு மட்டும் உரியது

ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு.

வியங்கோள் :
வாழ்த்தல், வைதல், விதித்தல், வேண்டல், என்னும் பொருள்களில் வரும்.

தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூவிடங்களுக்கும் உரியது.

ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.

## 3.6 தொகுப்புரை

இப்பாடத்தில் முன்னிலை வினைமுற்றுகள் பற்றிப் பார்த்தோம். முன்னிலை வினை ஒருமை, பன்மையை மட்டும் உணர்த்தும். இவ்வினையில் பெரும்பாலும் தெரிநிலை, குறிப்பு ஆகிய இரண்டிற்கும் ஒரே வகையான வினைமுற்று விகுதிகளே உள்ளன. முன்னிலை வினையின் ஒரு வகையே ஏவல் வினை. இது, எதிர்காலத்திற்கு மட்டும் உரியது. வியங்கோள் வினையும் ஒரு வகையில் ஏவல் என்றாலும் வியங்கோள் மூவிடத்திற்கும் உரியது. ஆதலால் தனி வினையாகப் பேசப்பட்டு வருகிறது. இவ்வினைமுற்றுகளுக்குரிய விகுதிகள் பற்றியும் இப்பாடத்தில் பார்த்தோம். குறிப்பாக, பழங்காலத்தில் இருந்த விகுதிகள் நினைவுபடுத்திக் கொள்ளத் தக்கனவாகும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் 4

## A02124 படர்க்கை வினைமுற்றுகள்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

படர்க்கை வினைமுற்று பற்றி விளக்குகிறது. படர்க்கை வினைமுற்றுகளில் இருதிணை ஐம்பாலுக்குத் தனித்தனி விகுதிகள் உள்ளன என்கிறது. தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று ஆகிய இரண்டு வகைகளும் பெரும்பாலும் பொதுவான வினைமுற்று விகுதிகளையே பெற்றுள்ளமையைத் தெரிவிக்கிறது. பலவின்பால் வினைமுற்று விகுதி ‘ஆ’ என்பது எதிர்மறைப் பொருளில் வருவதை உணர்த்துகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- அன், ஆன் என்பன படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் என அறியலாம்.
- அள், ஆள் என்பன பெண்பால் வினைமுற்று விகுதிகள் எனத் தெரிந்து கொள்ளலாம்.
- அர், ஆர் என்பனவும் ப, மார் ஆகியனவும் பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் என உணரலாம்.
- து, று, டு ஆகியன ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் எனத் தெளியலாம்.
- அ, ஆ ஆகியன பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் என்று அறியலாம்.

# பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை

4.1 படர்க்கை ஆண்பால் வினைமுற்று

4.2 படர்க்கைப் பெண்பால் வினைமுற்று

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

4.3 படர்க்கைப் பலர்பால் வினைமுற்று

4.4 படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று

4.5 படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று

4.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 4.0 பாட முன்னுரை

படர்க்கை என்னும் சொல் பேசப்படுபவரைக் குறிக்கும் சொல்லாகும். ‘அவன் வந்தான்’ என்னும் தொடரில் ‘வந்தான்’ என்பது படர்க்கை வினைமுற்றுச் சொல். மூவிடப் பெயர்களில் தன்மை, முன்னிலைக்குரிய வினைமுற்றுகள் பற்றி முந்திய இரு பாடங்களில் படித்தீர்கள். இந்தப் பாடத்தில் படர்க்கை வினைமுற்றுகள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

# 4.1 படர்க்கை ஆண்பால் வினைமுற்று

படர்க்கை வினைமுற்றுகள் பால்காட்டும் விகுதிகளைப் பெற்றிருக்கும். உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டிலும் ஐந்து பால் பாகுபாடுகள் உள்ளன என்பதைப் பெயர்ச் சொல் பற்றிய பாடத்தில் படித்திருப்பது நினைவிருக்கலாம். அவற்றுக்குரிய பால்காட்டும் விகுதிகளைப் படர்க்கை வினைமுற்றுகள் பெற்றிருக்கும்.

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால் ஆகிய ஐந்து பால்களுள் முதலில் ஆண்பால் உணர்த்தும் வினைமுற்றுகளுக்கு உரிய விகுதிகள் பற்றித் தெரிந்து கொள்வோம்.

## 4.1.1 தெரிநிலை வினைமுற்று

'படர்க்கை' எனும் சொல் பேசப்படுபவரைக் குறிக்கும் சொல் என்பது முன்னர்க் கூறப்பட்டது. பேசப்படுபவர் ஆணாக இருந்தால்,

அவன் சொன்னான்
அவன் சென்றான்

என்பன போன்று பேசுவோம். இவற்றுள் 'சொன்னான்' 'சென்றான்' என்பன வினைமுற்றுச் சொற்கள். இவை, சொல்லுதல், செல்லுதல் என்னும் வினைகளைச் செய்தவன் என்பதைத் தெரிவிக்கின்றன. அவ்வினை செய்தவன் உயர்திணை, ஆண்பால், ஒருவன் என்பதை அச்சொல்லின் கடைசியில் உள்ள 'ஆன்' என்னும் விகுதியே உணர்த்துகிறது.

தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள் காலம் காட்டுவனவாகும். காலம் மூவகைப்படும். இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என அவற்றைக் குறிக்கிறோம்.

இறந்த காலம் என்பது ஒரு செயல் நடந்து முடிந்தமையைக் குறிக்கும். இதற்கு எடுத்துக்காட்டு 'வந்தான்' என்பது. நிகழ் காலம் என்பது செயல் நடந்து கொண்டிருப்பதைக் குறிக்கும். இதற்கு எடுத்துக்காட்டு 'நடக்கிறான்' என்னும் சொல். எதிர்காலம் என்பது செயல் நிகழ இருப்பதைக் குறிக்கும். 'நடப்பான்' என்பது இதற்குச் சான்று. வினைச் சொற்கள் காலம் காட்டுவதைப் பற்றிப் பின்னர் (a02126 என்னும் பாடத்தில்) விரிவாகப் படிப்பீர்கள். இவ்வாறு காலம் காட்டும் வினைச் சொற்களுக்குத் தெரிநிலை வினை என்று பெயர்.

நடந்தான், நடக்கிறான், நடப்பான் என்பன போன்ற சொற்களில் இறுதியில் உள்ள ஆன் என்பது ஆண்பால் வினைமுற்று விகுதி.

குறிப்பாகக் காலம் உணர்த்தும் குறிப்பு வினைமுற்றுச் சொற்களிலும் இறுதியில் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் விகுதி இடம் பெற்றிருக்கும்.

ஒரு செய்தி இங்கு நினைவிற்கு உரியது. பெயர்ச்சொற்கள் பலவற்றிலும் அன், ஆன் போன்ற விகுதிகள் இடம் பெறல் உண்டு. இதனைப் பெயர்ச்சொற்கள் பற்றிய பாடத்தில் படித்திருப்பீர்கள். ஒரு விகுதி, பெயர் விகுதியா, வினைமுற்று விகுதியா என்பதை இடமறிந்து தெரிந்து கொள்ள வேண்டும். 'ஆன்' என்னும் விகுதி ஒன்றுதான் என்றாலும், அது வருகிற இடம் நோக்கி இருவேறு பெயரைப் பெறுகிறது என்பது நினைவில் கொள்ள வேண்டும்.

தெரிநிலை வினைமுற்றுகள் மூன்று காலத்திற்கும் கீழ்வருமாறு அமையும்.

இறந்த காலம் – படித்தான் (ஆன்)
நிகழ் காலம் – படிக்கிறான் (ஆன்)
எதிர் காலம் – படிப்பான் (ஆன்)

இவை அனைத்திலும் ஆண்பால் விகுதியாக ஆன் வந்திருப்பது போல் ‘அன்’ விகுதியும் ஆண்பால் குறிக்க வருவதுண்டு.

எடுத்துக்காட்டுகள்:

இறந்த காலம் – படித்தனன் (அன்)
நிகழ் காலம் – படிக்கின்றனன் (அன்)
எதிர் காலம் – படிப்பன் (அன்)

தெரிநிலை வினைமுற்றில் இவ்வாறு, அன், ஆன் விகுதிகள் படர்க்கை ஆண்பால் ஒருமை விகுதிகளாக வருவதைப் போல் குறிப்பு வினைமுற்றிலும் வரும். அதனை இனிக் காண்போம்.

### 4.1.2 குறிப்பு வினைமுற்று

குறிப்பு வினைமுற்று என்பது காலத்தைக் குறிப்பாக உணர்த்தும். இதில் காலம் உணர்த்தும் இடைநிலைகள் இடம் பெறா. வினைமுற்றில் கால இடைநிலைகள் வருவது பற்றி இத் தொகுப்பின் ஆறாவது பாடத்தில் படிக்க உள்ளீர்கள். இங்கு நாம் வெளிப்படையாகக் காலம் உணர்த்தாத வினைமுற்றுகளாகிய குறிப்பு வினைமுற்றுகள் பற்றியே பார்க்க உள்ளோம். படர்க்கை ஆண்பால் குறிப்பு வினைமுற்றில் அன், ஆன் என்பனவே விகுதிகளாக வரும்.

- பெயரும் குறிப்பு வினைமுற்றும்

‘உழவன் வந்தான்’ எனும் தொடரில் உள்ள உழவன் என்னும் சொல் பெயர் அல்லது எழுவாய்.

‘அவன் உழவன்’ எனும் தொடரில் உள்ள உழவன் எனும் சொல் குறிப்பு வினைமுற்று. எனவே, ஒரு சொல் தொடரில் வரும் இடம் நோக்கியே, அது பெயர் (அல்லது) குறிப்பு வினைமுற்று என்று முடிவு செய்ய வேண்டும்.

அவன் தச்சன் அன்
அவன் எழுத்தாளன்
அவன் மலையன்
அவன் அருளாளன்
என்னும் தொடர்களில் எல்லாம் குறிப்பு வினைமுற்று விகுதியாக ‘அன்’ வந்துள்ளது. இது போல் ‘ஆன்’ விகுதியும் வரும். இதற்கு எடுத்துக்காட்டு:

அவன் புதாரான் – ஆன்
அவன் வெளியூரான்
அவன் சடைமுடியான்
அவன் தூரிகையான்
இத்தொடர்களில் கடைசியில் உள்ள சொற்கள் யாவும் குறிப்பு வினைமுற்றுகளாகும். இவற்றுள் ஆன் விகுதி வந்துள்ளதைக் காண்க.

இதுவரை படர்க்கை ஆண்பால் வினைமுற்றுச் சொற்களில் ‘அன்’ என்பதும், ‘ஆன்’ என்பதும் விகுதிகளாக வரும் என அறிந்தோம். ஒரு விகுதி, பெயரின் ஈற்றில் (ஈறு = கடைசி) வந்தால் அது பெயர் விகுதி எனப்படும். வினைமுற்றுச் சொற்களின் ஈற்றில் வந்தால் அதற்கு வினைமுற்று விகுதி என்று பெயர். இவற்றை நன்கு நினைவிற் பதித்தல் வேண்டும்.

## 4.2 படர்க்கைப் பெண்பால் வினைமுற்று

உயர்திணையில் ஆண்பால் என்பதைப் போல் பெண்பால் எனும் பகுப்பும் உள்ளது. பெண்பால் வினைமுற்றுக்கு,

குறத்தி வந்தாள்
வள்ளி வந்தாள்

என்பன போன்ற தொடர்களில் உள்ள 'வந்தாள்' என்னும் சொல் சான்றாகும். இதில் உள்ள 'ஆள்' என்னும் விகுதி, பெண்பாலைச் சுட்டும் வினைமுற்று விகுதியாகும். ஆண்பால் விகுதிகள் போன்று, பெண் பால் விகுதிகளும் பெயர் விகுதியாதல் உண்டு.

உமையாள் வந்தாள்

என்பதில் உமை என்பதோடு சேர்ந்துள்ள விகுதி பெண்பால் உணர்த்தும் பெயர் விகுதி. பெயர் விகுதியும், வினைமுற்று விகுதியும் வடிவில் ஒன்றே. 'ஆள்' என்பது பெயரோடு சேர்ந்து வந்தால் பெயர் விகுதி, வினையோடு சேர்ந்து முற்றுப் பொருள் தரின் அதுவே வினைமுற்று விகுதி என்பது நினைவிற்குரியது.

### 4.2.1 தெரிநிலை வினைமுற்று

படர்க்கை இடத்தில் பெண்பாலைக் குறிக்கும் தெரிநிலை வினைமுற்றுகள் 'ஆள்' விகுதியைப் பெரும்பாலும் பெற்று வரும். இதற்குச் சில சான்றுகள் பார்ப்போம்.

சாந்தி வந்தாள் – (இறந்த காலம்) ஆள்
சாந்தி வருகிறாள் – (நிகழ் காலம்)
சாந்தி வருவாள் – (எதிர் காலம்)

மூன்று கால வினைமுற்றுச் சொற்களிலும் 'ஆள்' விகுதி இறுதியில் உள்ளமை நோக்கத்தக்கது. இதுபோல் 'அள்' விகுதியும் வருவதுண்டு.

அவள் நடந்தனள் – இறந்த காலம் அள்
அவள் நடக்கின்றனள் – நிகழ் காலம்
அவள் நடப்பள் – எதிர் காலம்

இவ் எடுத்துக்காட்டுத் தொடர்கள் அனைத்திலும் அள் விகுதி தெரிநிலை வினைமுற்று விகுதியாக வந்துள்ளமை காணலாம். இதுபோல் குறிப்பு வினைமுற்றுகளிலும் அள், ஆள் எனும் விகுதிகள் வரும். இது பற்றி அடுத்துக் காண்போம்.

### 4.2.2 குறிப்பு வினைமுற்று

அவள் பொன்னள் – அள்
அவள் இன் சொல்லள்
அவள் மனையாள் – ஆள்
அவள் நல்லாள்

இத் தொடர்களில் அள், ஆள் என்னும் விகுதிகளை உடைய குறிப்பு வினைமுற்றுச் சொற்கள் வந்துள்ளன. இக்காலத்தில் குறிப்பு வினைமுற்றுகளை மிகுதியாக நாம் பயன்படுத்துவது இல்லை எனினும் இலக்கியப் பயிற்சிக்கு இத்தகு செய்திகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

# 4.3 படர்க்கைப் பலர்பால் வினைமுற்று

பேசப்படுவோர் பலராக இருந்தால், அவர்களைக் குறிக்கும் வினைமுற்றுகளையே பலர்பால் வினைமுற்று என்கிறோம்.

அமைச்சர்கள் வந்தனர்
மாணவர்கள் சென்றனர்

எனும் இத்தொடர்களில் வந்தனர், சென்றனர் என்னும் சொற்கள் பலர்பால் உணர்த்தும் வினைமுற்றுச் சொற்களே. இச்சொற்களின் இறுதியில் ‘அர்’ விகுதி வந்து அவை பலர்பால் உணர்த்தின. ‘அர்’ விகுதி பலர்பால் உணர்த்துவதாக வினைமுற்றில் வருவதுபோல் அக்காலத்தில் ஆர் விகுதியும் வந்துள்ளது. ‘வீரர்கள் நடந்தனர்’ என்று இப்போது குறிப்பதைப் பழங்காலத்தில்

‘வீரர் நடந்தார்’

என்றே எழுதியுள்ளனர். இன்று நாம் இவ்வாறு எழுதினால் வீரர் ஒருவர் நடந்ததாகப் பொருள் கொள்வோம். இத்தொடர் அக்காலத்தில் பலரையே சுட்டும். ஒருவனைக் குறிக்க வேண்டும் என்றால் அக்காலத்தில் ‘வீரன் நடந்தான்’ என்றே எழுதுவர்.

பலர்பாலைக் குறிக்கும் வினைமுற்றுகளுக்கு மேலும் சில சான்றுகள் காண்போம். அடைப்புக் குறிக்குள் பொருளும் தரப்பெற்றுள்ளது.

உழவர் வந்தார் = (உழவர்கள் வந்தனர்)
புலவர் பாடினார் = (புலவர்கள் பாடினார்கள்)
பாணர் பாடினார் = (பாணர்கள் பாடினார்கள்)

பலர்பால் படர்க்கை வினைமுற்றுகளில் அர், ஆர், ப, மார் எனும் விகுதிகள் பயன்படுகின்றன. இவை தெரிநிலை வினைமுற்றுகளில் வருவது குறித்து இனிக் காண்போம்.

## 4.3.1 தெரிநிலை வினைமுற்று

அர், ஆர் எனும் விகுதிகள் சேர்ந்து படர்க்கைப் பலர்பால் வினைமுற்றுகள் அமைகின்றன. இறந்தகால வினைமுற்றுக்குச் சான்று:

மாணாக்கர் படித்தனர் (மாணவர்கள் படித்தார்கள்)

நடிகையர் நடித்தனர் (நடிகையர்கள் நடித்தார்கள்)

பகைவர் ஓடினார் (பகைவர்கள் ஓடினார்கள்)

மகளிர் அணிந்தார் (மகளிர் அணிந்தார்கள்)

தெரிநிலை வினைமுற்றில் ப, மார் எனும் விகுதிகளும் பலர்பால் உணர்த்தப் பயன்பட்டுள்ளன. இவை இக்காலத்தில் பயன்பாட்டில் மிகுதியாக இல்லாதவையே என்றாலும் தெரிந்து கொள்வதற்காகக் கீழே சில சான்றுகள் தரப்பெறுகின்றன.

- ப விகுதி

இது இறந்தகாலப் பொருளிலும், எதிர்காலப் பொருளிலும் மட்டும் வரும்.

சான்று : என்ப, கூறுப முதலியன

‘என்ப’ என்பதற்கு என்றார்கள் என்றும், என்று கூறுவார்கள் என்றும் இடத்திற்கேற்பப் பொருள் கொள்ளலாம்.

- மார் விகுதி

இவ்விகுதியும் இன்றைய வழக்கில் இல்லாத ஒன்று. இவ்விகுதியைப் பெற்றுவரும் வினைச் சொல்லிற்குச் சான்று:

கொண்மார் வந்தார்
உண்மார் வந்தார் – என்பன
(கொண்மார் = கொள்வார்)

இங்கு மார் விகுதி, பெயரோடு வரும் மார் விகுதியில் இருந்து வேறானது. இதுவே பெயரோடு வரும்போது தேவிமார், குருமார், தாய்மார் என்பன போல அமையும். இதை நினைவிற் கொள்ள வேண்டும்.

### 4.3.2 குறிப்பு வினைமுற்று

அர், ஆர் எனும் விகுதிகள் படர்க்கைப் பலர்பால் உணர்த்துவதாக வரும் என முன்னர்ப் பார்த்தோம். இவையே குறிப்பு வினையிலும் வரும்.

அவர் காஞ்சியார்
இவர் கோவையார் ‘ஆர்’ விகுதி
அவர் பாடகர்
இவர் நடிகர் ‘அர்’ விகுதி

தெரிநிலை வினையில் உரைக்கப் பெற்ற ‘ப’, ‘மார்’ எனும் விகுதிகள் குறிப்பு வினைமுற்றில் வருவதில்லை.

எனவே, இதுவரை படர்க்கைக்கு உரியனவாக உயர்திணையில் கீழ்க்காணும் வினைமுற்று விகுதிகள் வரும் என்பதை அறிந்தோம்.

ஆண்பாலுக்கு உரியன – அன், ஆன்
பெண்பாலுக்கு உரியன – அள், ஆள்
பலர்பாலுக்கு உரியன – அர், ஆர், ப, மார்

இவற்றுள் ப, மார் எனும் இரண்டு தவிர்த்த ஏனையவை தெரிநிலை வினை, குறிப்பு வினை எனும் இரண்டிலும் பயன்படுவதையும் அறிந்தோம். இனி அஃறிணைக்குரிய படர்க்கை வினைமுற்றுகள் பற்றிப் பார்ப்போம்.

## 4.4 படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று

இதுவரை உயர்திணை வினைமுற்றுகள் பற்றிப் பார்த்தோம். இனி, அஃறிணையில் உள்ள ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டுக்கும் உரிய வினைமுற்றுகள் குறித்துக் காண்போம்.

அஃறிணை ஒன்றன் பாலுக்கு உரிய வினைமுற்று விகுதிகள் மூன்று. அவை து, று, டு என்பன. இவை தெரிநிலை வினைமுற்றுகளில் வருவதைப் பற்றி முதலில் காண்போம்.

### 4.4.1 தெரிநிலை வினைமுற்று

இக்காலத்தில் ஒன்றன்பாலுக்குரிய தெரிநிலை வினைமுற்றுச் சொற்களில் பெரும்பாலும் 'து' விகுதி பயன்படுகிறது.

நிகழ்காலத்தில் இது வருவதற்குச் சான்றுகள்:
ஓடுகிறது, மேய்கிறது, நிற்கிறது போன்றவை.
இறந்தகாலத்தில் 'து' விகுதி வருவதற்குச் சான்றுகள்:
ஓடியது, மேய்ந்தது முதலியன.

எதிர்காலத்தில் 'து' விகுதி வருவதற்குச் சான்றுகள்:

ஓடுவது, நடப்பது

ஆகியன. எனினும் எதிர்காலப் பொருளில் இச்சொற்களின் பயன்பாடு இன்று குறைவாகவே உள்ளது.

று, டு ஆகியனவும் அஃறிணை ஒன்றன்பால் விகுதிகளே. இவற்றுள் 'டு' குறிப்பு வினைமுற்றிலேயே பயன்படுகிறது. 'று' எனும் விகுதியும் குறிப்பு வினைமுற்றில் வருகிறது. தெரிநிலை வினைமுற்றில் இது இறந்த காலத்தில் மட்டும் வருகிறது. அதற்குச் சான்று:

போயிற்று, தாவிற்று என (போனது, தாவியது எனும் பொருளில்) வரும்.

### 4.4.2 குறிப்பு வினைமுற்று

'கோட்டது' என்னும் சொல் கொம்பு உடையது எனும் பொருளில் வரும். 'தழையது' என்பதும் தழை உடையது எனும் பொருளில் வரும். காலத்தைத் தெளிவாக உணர்த்தாமையால் இவை குறிப்பு வினைமுற்றுகள். 'து' விகுதி இவ்வாறு வருவது போன்று று, டு விகுதிகளும் குறிப்பு வினைமுற்றில் வரும்.

எடுத்துக்காட்டு:
'று' விகுதி – பிழையிற்று (பிழை உடையது)
'டு' விகுதி – பொருட்டு (பொருளை உடையது)
இச்சொல்லாட்சிகளும் இக்காலத்தில் குறைவாகவே பயன்படுத்தப் படுகின்றன.

## 4.5 படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று

படர்க்கையில் பலவற்றைக் குறிக்கும் வினைமுற்றுச் சொற்களில் அ, ஆ என்பன வினைமுற்று விகுதிகளாகப் பயன்படுகின்றன. இவற்றைப் பற்றிய செய்திகளை இனிக் காண்போம்.

### 4.5.1 தெரிநிலை வினைமுற்று

மாடுகள் மேய்ந்தன
பறவைகள் பறக்கின்றன
மரங்கள் வளர்கின்றன

இவ்வினைமுற்றுகள் பலவின்பாலுக்கு உரியன. இவற்றுள் 'அ' எனும் விகுதி வினைமுற்று விகுதியாக வந்துள்ளது. இவ்விகுதி,

மாடுகள் மேய்ந்த
பறவைகள் பறக்கின்ற

என்பன போலவும் முற்காலத்தில் பயன்பட்டுள்ளது. இவற்றுக்கும் மேய்ந்தன, பறக்கின்றன என்பதே பொருள்.

'ஆ' எனும் வினைமுற்று விகுதி எதிர்மறை வினைமுற்றுகளில் மட்டுமே வரும்.

அவை மேயா
அவை பறவா
அவை வளரா

இவற்றுக்கு மேய மாட்டா, பறக்க மாட்டா, வளர மாட்டா என்பது பொருள்.

இவற்றுள் அகர விகுதி மட்டும் குறிப்பு வினைமுற்றிலும் பயன்படுகின்றது. இனி அதனைக் காண்போம்.

### 4.5.2 குறிப்பு வினைமுற்று

பலவின்பால் என்பது அஃறிணைப் பன்மை என்பதை அறிவீர்கள். அதற்கான வினைமுற்று விகுதியாக 'அ' என்பது தெரிநிலை வினையில் வருவதை மேலே பார்த்தோம். குறிப்பு வினைமுற்றிலும் 'அ' என்பது வினைமுற்று விகுதியாக வருவதை எடுத்துக்காட்டுகள் வழி இனிக் காண்போம்.

கரிய, பெரிய, நல்ல என்பன போன்ற சொற்களை குறிப்பு வினைமுற்றுகளாகப் பயன்படுத்தலாம்.

மலைகள் பெரிய (பெரியனவாக உள்ளன)
யானைகள் கரிய (கரியனவாக உள்ளன)
அவை நல்ல (நல்லவையாக உள்ளன)

எனும் பொருள்பட வரும். இவ்வாறு வருவனவற்றைப் பேசுவோர் கேட்போர் கருத்திற்கேற்ப,

நேற்று இம்மலைகள் பெரிய
இன்று இம்மலைகள் பெரிய

நாளை இம்மலைகள் பெரிய

எனக் குறிப்பாகக் காலம் காட்டுமாறு பயன்படுத்தலாம். இவ்வாறு ‘அ’கரம் குறிப்பு வினைமுற்று விகுதியாகப் பயன்படுவதை நினைவிற் கொள்க.

## 4.6 தொகுப்புரை

இந்தப் பாடத்தில் படர்க்கை வினைமுற்றுகள் ஐந்து வகையான பால் பாகுபாட்டிற்கேற்ப விகுதிகளைப் பெற்று வருவதைப் பார்த்தோம். தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று ஆகியவற்றில் பெரும்பாலும் ஒரே வகை விகுதிகளே பயன்படுகின்றன என்பதையும் தெரிந்து கொண்டோம். ‘ஆ’ என்பது மட்டும் எதிர்மறைப் பொருள் தரும் வினைமுற்று விகுதியாக வருவதையும் பார்த்தோம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் 5

# A02125 பெயரெச்சம், வினையெச்சம்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றின் அமைப்பினை இந்தப் பாடம் எடுத்துரைக்கின்றது. பெயரெச்சமும் வினையெச்சமும் எவ்வகைச் சொற்களைக் கொண்டு முடியும் என்பது பற்றி விளக்குகின்றது. இருவகை எச்சமும் காலம் காட்டும் முறைகள் குறித்து விவரிக்கின்றது. உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் இருவகை எச்சங்களும் பொருள்தரும் முறைகளைக் குறிப்பிடுகின்றது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- எச்சங்கள், தொடர்களில் இடம்பெறும் முறைகளைத் தெரிந்து கொள்ளலாம்.
- எச்சங்கள் அடுக்கி வரும் தன்மை பற்றி அறிந்து கொள்ளலாம்.
- எச்சங்களின் வடிவத்திற்கும் பொருளுக்கும் இடையிலான தொடர்பினை அறியலாம்.
- எச்சங்கள், பொருள் தெளிவும் சிறப்பும் அளிக்கும் முறைகளைப் புரிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை

5.1 எச்சம் – விளக்கம்

5.2 பெயரெச்சம் – விளக்கம்

5.3 பெயரெச்ச வகைகள்

5.4 பெயரெச்ச மரபுகள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

5.5 வினையெச்சம் – விளக்கம்

5.6 வினையெச்ச வடிவங்கள்

5.7 வினையெச்சம் கொண்டுமுடியும் வினைகள்

5.8 வினையெச்ச வகைகள்

5.9 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 5.0 பாட முன்னுரை

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது, பெயர்ச்சொல் எனவும், ஒரு பொருளின் செயலைக் குறிப்பது வினைச்சொல் எனவும் அறிந்தோம்.

பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய எச்சச் சொற்கள் பற்றியும், அவற்றின் வகைகளையும், அவை தொடர்பான சில மரபுகளைப் பற்றியும் இந்தப் பாடத்தில் காண்போம்.

## 5.1 எச்சம் - விளக்கம்

(1) எச்சம் என்பது, தன் அளவில் பொருள் முற்றுப் பெறாததாய் இருக்கும்.
(2) பெயர்ச்சொல்லையோ, வினைச்சொல்லையோ கொண்டு முடிவதாய் அமையும்.
(3) காலம் காட்டும் செயலை உணர்த்தும்.
(4) திணை, பால், எண், இடம் உணர்த்தாது.
(5) வினைப்பகுதியைக் கொண்டிருக்கும், எச்சத்திற்கு உரிய விகுதியைப் பெற்றிருக்கும்.

(எ.கா) (1) பெயர்ச்சொல் கொண்டு முடிவன :
வந்த பையன்
உண்ட குதிரை
(2) வினைச்சொல் கொண்டு முடிவன:
உண்டு வந்தான்
ஓடி வந்தது

### 5.1.1 எச்சமும் முற்றும்

பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் 'உண்ட' என்னும் எச்சச் சொல்லை, 'உண்+ட்+அ' எனப் பிரிப்பர். இதில் உள்ள 'அ' என்னும் விகுதியைக் கொண்டு, திணை, பால், எண், இடங்களை அறிய இயலாது. அடுத்து வரும் பெயர்ச் சொல்லைக் கொண்டே பொருள் முழுமை பெறும்.

வினைச் சொல்லைக் கொண்டு முடியும் 'உண்டு' என்னும் எச்சச் சொல்லை, 'உண்+ட்+உ' எனப் பிரிப்பர். இதில் உள்ள 'உ' என்னும் விகுதியைக் கொண்டு, திணை, பால், எண், இடங்களை அறிய இயலாது. அடுத்து வரும் வினைச் சொல்லைக் கொண்டே பொருள் முழுமை பெறும்.

வினைமுற்றுச் சொல்லாகிய 'உண்டான்' என்பதை, 'உண்+ட்+ஆன்' எனப் பிரிப்பர். இதிலுள்ள 'ஆன்' என்னும் விகுதியைக் கொண்டு, உயர்திணை, படர்க்கை, ஆண்பால், ஒருமை என அனைத்தையும் அறிகின்றோம்.

எனவே, பொருள் எஞ்சி நிற்பது எச்சம் எனவும், பொருள் முற்றுப்பெற்று நிற்பது முற்று எனவும் அழைக்கப்பட்டன.

### 5.1.2 எச்ச வகைகள்

எச்சம் இரு வகைகளில் முடியும் என்று கண்டோம். அவற்றுடன், பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சம், பெயரெச்சம் எனப்படும். வினைச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சம், வினையெச்சம் எனப்படும்.

(எ.கா) பெயரெச்சம் – உண்ட பையன்
வினையெச்சம் – உண்டு வந்தான்

## 5.2 பெயரெச்சம் - விளக்கம்

பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சச்சொல் பெயரெச்சம் எனப்படும். அது வினைப்பகுதி, காலம் காட்டும் இடைநிலை, பெயரெச்ச விகுதி ஆகியவற்றை உடையதாய் அமையும். பெயரெச்சம் காலமும் செயலும் காட்டும்.

(எ.கா) படித்த பாடம்.
கொடுத்த பணம்

### 5.2.1 பெயரெச்ச வடிவங்கள்

பெயரெச்சம் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூன்று வடிவங்களில் அமையும். இவ்வடிவங்களை 'வாய்பாடுகள்' என்பர்.

'செய்த' என்னும் வாய்பாடு இறந்தகாலம் காட்டும். 'செய்கின்ற' வாய்பாடு நிகழ்காலம் காட்டும். 'செய்யும்' வாய்பாடு எதிர்காலம் காட்டும்.

(எ.கா) செய்த – படித்த சிறுவன்
செய்கின்ற – படிக்கின்ற சிறுவன்
செய்யும் – படிக்கும் சிறுவன்
இவற்றுள் 'செய்யும்' என்னும் வாய்பாடு, தொல்காப்பியர் காலத்தில் நிகழ்காலத்தைக் குறிப்பதாக இருந்துள்ளது. நன்னூலார் காலம் முதற்கொண்டு எதிர்காலத்தைக் குறிக்கத் தொடங்கியது.

### 5.2.2 பெயரெச்சம் காலம் காட்டும் முறை

1. 'செய்த' என்னும் பெயரெச்ச வடிவம், த், ட், ற், இன் என்னும் இடைநிலைகளால் இறந்த காலத்தை உணர்த்தும்.

(எ.கா) த் – படித்த பாடம்
ட் – கண்ட காட்சி
ற் – தின்ற கரும்பு
இன் – போயின போக்கு
2. 'செய்கின்ற' என்னும் பெயரெச்ச வடிவம், 'கிறு', 'கின்று', 'ஆநின்று' என்னும் இடைநிலைகளால் நிகழ்காலத்தைக் காட்டும். இவற்றுள் 'ஆநின்று' இடைநிலை இன்றைய வழக்கில் இல்லை.

(எ.கா) கிறு – உண்கிற சிறுவன்
கின்று – உண்கின்ற சிறுவன்
ஆநின்று – உண்ணாநின்ற சிறுவன்
3.'செய்யும்' என்னும் பெயரெச்ச வடிவம், 'உம்' என்னும் விகுதியால் எதிர்காலத்தை உணர்த்தும்.

(எ.கா) படிக்கும் சிறுவன்
பாடும் சிறுமி

### 5.2.3 பெயரெச்சம் கொண்டுமுடியும் பெயர்கள்

பெயரெச்சம், செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய அறுவகைப் பெயர்களுள் ஏதேனும் ஒன்றினைக் கொண்டு முடியும்.

(எ.கா)

(1) செய்பவன் – உண்ட சாத்தன், பாடும் புலவன்
(2) கருவி – உண்ட தட்டு, வெட்டும் வாள்
(3) நிலம் – உண்ட அறை, வாழும் இல்
(4) செயல் – உண்ட ஊண், வாழும் வாழ்க்கை
(5) காலம் – உண்ட நாள், துயிலும் காலம்
(6) செயப்படுபொருள் – உண்ட சோறு, கற்கும் நூல்
(ஊண் = உணவு; இங்கு உண்ட செயல் எனப் பொருள் தரும்.)

### 5.2.4 பெயரெச்சம் மூவிடங்களிலும் இடம்பெறுதல்

பெயரெச்சம், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் இரு திணை, ஐம்பாலுக்கும் பொதுவாக வரும்.

(எ.கா)

தன்மை ஒருமை – உண்ட நான்
தன்மைப் பன்மை – உண்ட நாம் (நாங்கள்)
முன்னிலை ஒருமை – உண்ட நீ
முன்னிலைப் பன்மை – உண்ட நீவிர் (நீங்கள்)
படர்க்கை ஆண்பால் – உண்ட செல்வன்
பெண்பால் – உண்ட செல்வி
பலர்பால் – உண்ட மக்கள்
ஒன்றன்பால் – உண்ட பசு
பலவின்பால் – உண்ட பசுக்கள்

## 5.3 பெயரெச்ச வகைகள்

பெயரெச்சத்தைக் காலம் காட்டும் முறையின் அடிப்படையில், தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இரு வகைப்படுத்துவர்.

### 5.3.1 தெரிநிலைப் பெயரெச்சம்

காலத்தை வெளிப்படையாகக் காட்டும் பெயரெச்சம், தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும். இடைநிலை அல்லது விகுதியைக் கொண்டு பெயரெச்சம் காலம் காட்டும்.

அ, உம் ஆகிய இரண்டு விகுதிகள் தெரிநிலைப் பெயரெச்சத்தில் இடம்பெறுகின்றன.

(எ.கா)

இறந்தகாலப் பெயரெச்சம் – கேட்ட பாட்டு
('ட்' இறந்தகால இடைநிலை)
நிகழ்காலப் பெயரெச்சம் – கேட்கின்ற பாட்டு
('கின்று' நிகழ்கால இடைநிலை)
எதிர்காலப் பெயரெச்சம் – கேட்கும் பாட்டு
('உம் பெயரெச்ச விகுதி)
இறந்தகாலத்தையும், நிகழ்காலத்தையும் இடைநிலைகள் உணர்த்துகின்றன. எதிர்காலத்தை விகுதி உணர்த்துகிறது

### 5.3.2 குறிப்புப் பெயரெச்சம்

பெயர் அடியாகப் பிறந்து, காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

குறிப்புப் பெயரெச்சம் 'அ' என்னும் விகுதியைப் பெற்று வரும்.

(எ.கா) சிறிய பையன்
புதிய பாடம்
அழகிய கவிதை
இவை முறையே சிறுமை, புதுமை, அழகு ஆகிய பெயர்களின் அடியாகப் பிறந்தவை. நேற்றுச் சிறிய பையன், இன்று சிறிய பையன், நாளை சிறிய பையன் எனச் சூழ்நிலைக்கு ஏற்பக் குறிப்புப் பெயரெச்சம் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும்.

## 5.4 பெயரெச்ச மரபுகள்

செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொற்கள் இடைப்பகுதி, இறுதிப்பகுதி திரிந்து வருதலும், குறிப்புமுற்று பெயரெச்சமாதலும், எதிர்மறைப் பொருளில் பெயரெச்சம் வருதலும், பெயரெச்சம் அடுக்கி வருதலும், பெயரெச்சத்தில் இடைப்பிறவரலும் ஆகிய பெயரெச்ச மரபுகள் குறித்து இனிக் காண்போம்.

### 5.4.1 செய்யும் என்னும் வாய்பாடு – இடைதிரிதல்

செய்யும் என்னும் வாய்பாட்டில் அமையும் பெயரெச்சத்தின் இடையிலுள்ள உகரம் தான் ஊர்ந்துவரும் மெய்யுடன் சேர்ந்து கெடுவதும் உண்டு.

(எ.கா) போகும் போது – போம்போது
ஆகும் பொருள் – ஆம்பொருள்
கூவும் குயில் – கூங்குயில் (கூம்குயில்)
போகும், ஆகும், கூவும் எனும் சொற்களில் இடையில் வரும் குவ்வும் வுவ்வும் (கு = க்+உ, வு = வ்+உ) கெட்டன.

செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொற்களில் இடம்பெறும் ‘கு’, ‘வு’ என்னும் உயிர்மெய்கள் மட்டுமே இவ்வாறு கெடுவனவாகும். ஏனைய உயிர்மெய்கள் இங்ஙனம் கெடுவதில்லை. ‘பாடும் பாட்டு’ என்பது (‘டு’ என்னும் உயிர்மெய் கெட்டு) ‘பாம் பாட்டு’ என வருவதில்லை.

### 5.4.2 செய்யும் என்னும் வாய்பாடு – இறுதி திரிதல்

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் இறுதியாகிய ‘உம்’ விகுதி, செய்யுளில் ‘உந்து’ எனத் திரிந்து வருவதும் உண்டு.

(எ.கா) தெண்கடல் திரைமிசைப் பாயுந்து
நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து

### 5.4.3 குறிப்பு வினைமுற்று பெயரெச்சமாதல்

குறிப்பு வினைமுற்று, சில இடங்களில் தன்னை அடுத்துவரும் பெயருக்கு உரிய பெயரெச்சமாக மாறுபட்டுப் பொருள்படுவதும் உண்டு. வடிவத்தால் குறிப்பு வினைமுற்றாக இருப்பினும், பொருளால் பெயரெச்சமாக அமையும்.

(எ.கா)

வெந்திறலினன் விறல்வழுதியொடு

இங்கு, ‘வெந்திறலினன் ஆகிய விறல்வழுதி எனப் பொருள்பட்டு, குறிப்பு வினைமுற்று பெயரெச்சமானது.

### 5.4.4 எதிர்மறைப் பெயரெச்சம்

பெயரெச்சம், நிகழ்ச்சி நடத்தலாகிய உடன்பாட்டுப் பொருளில் வருவதை இதுவரையில் கண்டோம். நிகழ்ச்சி நடவாமையாகிய எதிர்மறைப் பொருளில்வரும்

தன்மையும் பெயரெச்சத்திற்கு உண்டு.

இது, காலம் காட்டுவதில்லை. முக்காலத்திற்கும் பொதுவானதாக அமையும்.

(எ.கா) பெய்யாத மழை
சொல்லாத சொல்
வீசாத தென்றல்
பெய்+ஆ+த்+அ – பெய்யாத. இதில் உள்ள ‘ஆ’ என்பது எதிர்மறை இடைநிலை. ‘அ’ பெயரெச்ச விகுதி.

- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

எதிர்மறைப் பெயரெச்சத்தில் வரும் அகர விகுதி, தான் ஊர்ந்துவரும் தகர மெய்யுடன் (த்) சேர்ந்து மறைந்து வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

(எ.கா) பெய்யா மழை
பேசாப் பேச்சு
உலவாத்தென்றல்
பெய்யாத, பேசாத, உலவாத என வரவேண்டியன, (த்+அ=த) த என்ற ஈறு மறைந்து பெய்யா, பேசா, உலவா என வந்தன.

### 5.4.5 பெயரெச்சம் அடுக்கி வருதல்

ஒவ்வொரு பெயரெச்சமும் ஒவ்வொரு பெயரைக் கொண்டு முடிவது முறை. ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட பெயரெச்சங்கள் அடுக்கி வந்து, இறுதியில் உள்ள எச்சம் கொண்டு முடியும் பெயரையே ஏனைய எச்சங்களும் கொண்டு முடிவதும் உண்டு.

தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் ஆகிய இரண்டுமே அடுக்கி வருவனவாகும்.

(எ.கா) தெரிநிலைப் பெயரெச்சம் – கற்ற கேட்ட பெரியார்
குறிப்புப் பெயரெச்சம் – நெடிய பெரிய மனிதர்

### 5.4.6 பெயரெச்சத்தில் இடைப் பிறவரல்

பெயரெச்சத்திற்கும், அது கொண்டுமுடியும் பெயர்ச் சொல்லுக்கும் இடையில், பொருள் பொருத்தம் உடையனவாக வரும் பிறசொற்களும் ஏற்றுக் கொள்ளப்படும். இது இடைக்கிடப்பு அல்லது இடைப் பிறவரல் எனப்படும்.

(எ.கா) வந்த மன்னன் – வந்த வடகாசி மன்னன்
கொல்லும் யானை – கொல்லும் காட்டுள் யானை
வடகாசி, காட்டுள் என வந்தவை இடைப் பிறவரலாகும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

# 5.5 வினையெச்சம் - விளக்கம்

வினைச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சச்சொல், வினையெச்சம் எனப்படும். அது வினைப்பகுதி, காலம் காட்டும் இடைநிலை, வினையெச்ச விகுதி ஆகியவற்றைக் கொண்டிருக்கும். வினையெச்சம் காலமும் செயலும் உணர்த்தும்.

(எ.கா) ஓடி வந்தான்
கிழித்துக் கொடுத்தான்

## 5.5.1 வினையெச்சம் மூவிடங்களிலும் இடம்பெறல்

வினையெச்சம் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும்.

(எ.கா) தன்மை ஒருமை – உண்டு வந்தேன்
தன்மைப் பன்மை – உண்டு வந்தோம்
முன்னிலை ஒருமை – உண்டு வந்தாய்
முன்னிலைப் பன்மை – உண்டு வந்தீர்
படர்க்கை ஆண்பால் – உண்டு வந்தான்
பெண்பால் – உண்டு வந்தாள்
பலர்பால் – உண்டு வந்தார்
ஒன்றன்பால் – உண்டு வந்தது
பலவின்பால் – உண்டு வந்தன

## 5.6 வினையெச்ச வடிவங்கள்

வினையெச்சச் சொற்கள், சில குறிப்பிட்ட வடிவங்களில் அமைகின்றன. அவ்வடிவங்களை வினையெச்ச வாய்பாடுகள், வினையெச்சச் சொற்கள் என இரு வகைப்படுத்தலாம்.

### 5.6.1 வினையெச்ச வாய்பாடுகள்

வினையெச்ச வாய்பாடுகள் பன்னிரண்டு ஆகும். அவற்றுள் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் ஐந்து வாய்பாடுகள் இறந்தகாலம் காட்டுவன. செய என்னும் வாய்பாடு நிகழ்காலம் காட்டுவது. செயின், செய்யிய, செய்யியர் வாய்பாடுகள் மற்றும் வான், பான், பாக்கு என்னும் ஈற்று வாய்பாடுகள் ஆகிய ஆறும் எதிர்காலம் காட்டுவனவாகும்.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்குஇன வினையெச் சம்பிற
ஐந்து ஒன்று ஆறும்முக் காலமும் முறைதரும் (343)
என்பது நன்னூல் நூற்பா.

வாய்பாடு காலம்
(1) செய்து இறந்தகாலம்
(2) செய்பு
(3) செய்யா
(4) செய்யூ
(5) செய்தென
(1) செய நிகழ்காலம்
(1) செயின் எதிர்காலம்
(2) செய்யிய
(3) செய்யியர்
(4) வான்
(5) பான்
(6) பாக்கு

• இறந்தகாலம் காட்டுவன

(1) செய்து – (1)
இவ்வாய்பாடு உகரம், இகரம், யகர ஒற்று ஆகிய மூன்று ஈறுகளுள் ஒன்றைப் பெற்று வரும்.

(எ.கா) உ- நடந்து வந்தான்
இ – ஓடி வந்தான்
ய் – போய் வந்தான்
(2) பகுதி விகாரப்பட்டும் வரும்
புகு – புக்கு வந்தான்
(3) விகுதி விகாரப்பட்டும் வரும்
தழுவி – தழீஇக் கொண்டான்
(2) செய்பு – உண்குபு சென்றான் (உண்டு)

(3) செய்யா -
எதிர்மறைச் சொல்போல் காணப்படினும் உடன்பாட்டுப் பொருள் தருவது.

(எ.கா) பெய்யாக் கொடுக்கும்
(பெய்து கொடுக்கும் என்பது பொருள்)

(4) செய்யூ – காணூஉ மகிழ்ந்தான் (கண்டு) (அளபெடையாக எழுதப்பெறுவது உண்டு.)
(5) செய்தென – மருந்து தின்றென நோய் தீர்ந்தது. (தின்று – தின்றதால்)
• நிகழ்காலம் காட்டுவது

செய – 'இது நிகழ இது நிகழ்ந்தது' என்னும் நிலையில் நிகழ்காலம் காட்டும்.

(எ.கா) செல்வன் சூரியன் உதிக்க வந்தான்.

இவ்வாய்பாடு, ஏனைக் காலங்களையும் காட்டுவது உண்டு.

(எ.கா) (1) காரணப் பொருள் உடையதாய் இறந்த காலம் காட்டும்.
(எ.கா) மழை பெய்ய நெல் விளைந்தது. (மழை பெய்ததால்)
(2) காரியப் பொருள் உடையதாய் எதிர் காலம் காட்டும்.
(எ.கா) நெல் விளைய மழை பெய்தது. (நெல் விளையுமாறு)
• எதிர்காலம் காட்டுவன

(1) செயின் – மழை பெய்யின் குளம் நிறையும்
(2) செய்யிய – உண்ணிய வருவான் (உண்ண)
(3) செய்யியர் – உண்ணியர் வருவான் (உண்ண)
(4) வான் – பெறுவான் வருவான் (பெற)
(5) பான் – கற்பான் வருவான் (கற்க)
(6) பாக்கு – தருபாக்கு வருவான் (தர)
இவை செய்யுள்களில் மட்டும் காணப்படுகின்றன.

### 5.6.2 வினையெச்சச் சொற்கள்

பின், முன், கால், கடை, வழி, இடத்து என்பன காலப் பொருளைக் குறித்து வரும் சொற்கள் ஆகும். இவை வினையெச்சங்களின் பின் சேர்ந்து வரும்

1. பின் – உண்டபின் வந்தான் (இறந்தகாலம்)
2. முன் – உண்ணு முன் வருவான் (எதிர்காலம்)
'பின்' என்னும் சொல் இறந்த காலத்தில் இடம்பெறும். 'முன்' என்னும் சொல் எதிர்காலம் குறித்துவரும். ஏனைய நான்கு சொற்களும் முக்காலத்திலும் இடம் பெறுவனவாகும்.

## 5.7 வினையெச்சம் கொண்டுமுடியும் வினைகள்

வினையெச்சம் தம் வினைமுதலின் வினைமுற்றால் முடிவது, தம் வினைமுதல் கொண்டு முடிவது எனப்படும். வேறு ஒரு வினைமுதலுக்கு உரிய முற்றினால் முடிவது, பிற வினைமுதல் கொண்டு முடிவது எனப்படும்.

எந்தெந்த வாய்பாடுகள் எவ்வெவ்வாறு வினைமுடிவு கொள்ளும் எனக் காண்போம். வினைமுதல் = எழுவாய் அல்லது செயலைச் செய்யும் கருத்தா.

### 5.7.1 தம் வினைமுதல் வினைகொண்டு முடிவன

எச்சத்தில் சொல்லப்படும் செயலுக்கு உரிய எழுவாயே, முற்றுச் சொல்லின் செயலுக்கும் உரிமை உடையதாக வருவது, 'தம் வினைமுதல் வினைகொண்டு முடிவது' எனப்படும்.

(எ.கா) முருகன் வந்து சென்றான்

'வந்து' என்னும் எச்சத்திற்குரிய எழுவாய் முருகன். 'சென்றான்' என்னும் முற்றுக்குரிய எழுவாயும் முருகனே. எனவே இது தம் வினைமுதல் வினை கொண்டது ஆகும்.

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, வான், பான், பாக்கு ஆகியன தம் வினைமுதல் வினைகொண்டு முடிவனவாகும்.

(எ.கா)

(1) செய்து – முருகன் கண்டு வந்தான்
(2) செய்பு – முருகன் காண்குபு வந்தான்
(3) செய்யா – மழை பெய்யாக் கொடுக்கும்
(4) செய்யூ – வள்ளி காணூஉ வந்தாள்
(5) வான் – வள்ளி கொள்வான் வருவாள்
(6) பான் – வள்ளி கற்பான் வருவாள்
(7) பாக்கு – செழியன் உண்பாக்கு வருவான்

• சினை வினையும் முதல் வினையும்

சினைக்கு உரிய வினையெச்சம், சினைக்கு உரிய வினைமுற்றால் முடிவது இயல்பு. முதலுக்கு உரிய வினைமுற்றால் முடிவதும் உண்டு.

சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்
(நன்னூல் : 345)
கை ஒடிந்து வீழ்ந்தது – சினைவினை கொண்டது.

செல்வன் கை ஒடிந்து வீழ்ந்தான் – முதல்வினை கொண்டது.

### 5.7.2 தம் வினைமுதல், பிற வினைமுதல் வினை கொள்வன

செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் ஆகிய வினையெச்ச வாய்பாடுகளும், பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் வினையெச்சச்

சொற்களும், தம் வினைமுதல் வினையும் பிற வினைமுதல் வினையும் கொண்டு முடிவனவாகும்.

(எ.கா)

(1) செய்தென – மழை பெய்தெனப் புகழ்பெற்றது – தன் வினைமுதல் வினை
- மழை பெய்தென மரம் குழைந்தது – பிற வினைமுதல் வினை
(2) செய – தான் உண்ண வருகிறான்
பிறர் உண்ணக் காண்கிறான்
(3) செயின் – மழை பெய்யின் புகழ்பெறும்
- மழை பெய்யின் குளம் நிறையும்
(4) செய்யிய – மழை பெய்யிய முழங்கும்
- மழை பெய்யிய வேண்டினர்
(5) செய்யியர் – மழை பெய்யியர் எழுந்தது
- மழை பெய்யிய வணங்கினர்
(6) பின் – செழியன் பசித்தபின் உண்டான்
- வண்டி நின்றபின் இறங்கினர்
(7) முன் – சாத்தன் உண்ணுமுன் வணங்குவான்
- நோய் வருமுன் காப்போம்

## 5.8 வினையெச்ச வகைகள்

வினையெச்சம், காலம் காட்டும் முறையின் அடிப்படையில் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இரு வகைப்படும்.

### 5.8.1 தெரிநிலை வினையெச்சம்

வினைப்பகுதி, காலங்காட்டும் இடைநிலை, வினையெச்ச விகுதி ஆகியவற்றை உடையதாய் வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சச்சொல் தெரிநிலை வினையெச்சம் எனப்படும். காலத்தை வெளிப்படையாகக் காட்டுவதால் தெரிநிலை வினையெச்சம் எனப்பட்டது.

(எ.கா) வந்து நின்றான் – இறந்தகாலம் காட்டியது.

### 5.8.2 குறிப்பு வினையெச்சம்

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், ஏதேனும் ஒரு வினைமுற்றுச் சொல்லைக் கொண்டு முடிவது, குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

(எ.கா) மெல்ல வந்தான் விரைவாக வந்தான்.

### 5.8.3 வினையெச்ச மரபுகள்

வினையெச்சம் எதிர்மறைப் பொருளில் வருதல், அடுக்கி வருதல், இடைப்பிறவரல், வினைமுற்றை அடுத்து வருதல், வினைமுற்று எச்சப்பொருள் தருதல், வினையெச்ச மாற்றங்கள் ஆகிய வினையெச்ச மரபுகள் குறித்துக் காண்போம்.

### 5.8.4 எதிர்மறை வினையெச்சம்

வினைப்பகுதி, எதிர்மறை இடைநிலை, வினையெச்ச விகுதி ஆகியன கொண்டு, வினைமுற்றால் பொருள் முடிவுபெறும் எச்சம் எதிர்மறை வினையெச்சம் எனப்படும். இது, காலம் காட்டுவது இல்லை; முக்காலத்திற்கும் உரியதாகக் கருதப்படுகின்றது.

செய்யாமல், செய்யாமே, செய்யாது ஆகிய வாய்பாடுகளில் எதிர்மறை வினையெச்சம் அமையும்.

(எ.கா) செய்யாமல் – உண்ணாமல் சென்றான்
செய்யாமே – உண்ணாமே சென்றான்
செய்யாது – உண்ணாது சென்றான்

- ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்

வினைப்பகுதி, ‘ஆ’ என்னும் எதிர்மறை இடைநிலை ஆகியவற்றைப் பெற்று, வினையெச்ச விகுதி மறைந்த நிலையில், வினை முற்றைக் கொண்டு முடியும் வினைச்சொல் வடிவம், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் எனப்படும்.

(எ.கா) உண்ணா வந்தான்
(உண்ணாது வந்தான் என்பது பொருள்)
செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்ச வாய்பாடும் வடிவமைப்பில் இதுபோலவே

அமைதலின், இடம் அறிந்து பொருள் கொள்ளுதல் அவசியம் ஆகும்.

- வினையெச்சம் அடுக்கி வருதல்

ஒரு வினையெச்சச் சொல், ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிவது இயல்பு. பல வினையெச்சச் சொற்கள் அடுத்தடுத்து அடுக்கி வந்து, ஒரே வினைமுற்றைக் கொண்டு முடிவதும் உண்டு.

(எ.கா) வந்து குளித்து உண்டு உறங்கிப் பேசிச் சென்றான்.

இதில் பேசி என்னும் வினையெச்சம் சென்றான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகிறது. அவ்வாறே பிற வினையெச்சங்களும் வந்து சென்றான், உண்டு சென்றான் என அதே வினைமுற்றைக் கொண்டு முடிகின்றன.

- வினையெச்சத்தில் இடைப்பிறவரல்

ஒரு வினையெச்சத்திற்கும், அது கொண்டு முடியும் வினைமுற்றுக்கும் இடையில், பொருள் பொருத்தம் உடையனவாக வரும் பிற சொற்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(எ.கா)
உழுது வந்தான் – உழுது ஏரொடு வந்தான்
வந்து போயினான்- வந்து சாத்தன் அவ்வூர்க்குப் போயினான்.

- வினையெச்சம் வினைமுற்றை அடுத்துவரல்

வினைமுற்றுக்கு முன்னால் வரக்கூடிய வினையெச்சம், வினைமுற்றுக்குப் பின்னால் வருவதும் உண்டு.

(எ.கா)

வந்து போயினான் – முன்னால் வந்தது
போயினான் வந்து – பின்னால் வந்தது

செய்யுளில் இவ்வாறு வருதல் இயல்பு.

(எ.கா)

பசிவந்திடப் போம் பறந்து (நல்வழி)
(போம் = போகும்)

இப்பாடலில் போகும் என்னும் வினைமுற்றை அடுத்து, பறந்து என்னும் வினையெச்சம் வந்துள்ளது.

### 5.8.5 வினைமுற்று வினையெச்சமாதல்

ஒரு வினைமுற்று, தன்னை அடுத்து மற்றொரு வினைமுற்று வரும்பொழுது, எச்சப்பொருள் தரும். இதனை, முற்றெச்சம் என்பர்.

தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று ஆகிய இரண்டும் முற்றெச்சமாக

அமையும் இயல்பினவாகும்.

(1) தெரிநிலை வினைமுற்று எச்சமாதல்

‘கண்டனன் வணங்கினான்’ – இதில் ‘கண்டனன்’ என்னும் முற்று கண்டு என எச்சப்பொருள் தருகிறது.

(2) குறிப்பு வினைமுற்று எச்சமாதல்

‘அவன் வில்லினன் வந்தான்’ – இதில் வில்லினன் என்பது, வில்லினன்ஆகி என எச்சப்பொருள் தருகிறது.

### 5.8.6 வினையெச்ச மாற்றங்கள்

வினையெச்ச வாய்பாடுகளுள் சில, வேறு வாய்பாட்டால் வருவதும் உண்டு. ஆனால் பொருள்மாற்றம் அடைவது இல்லை.

சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை

**(நன்னூல் : 346)**

(வினைக்குறை = வினையெச்சம்)

(1) ‘செய’ வாய்பாடு – ‘செய்து’ எனத் திரிதல்

அ. ஞாயிறு பட்டு வந்தான்

‘பட’ என வரவேண்டியது திரிந்து வந்தது.

ஆ. மழை பெய்து நெல் விளைந்தது

‘பெய’ என வரவேண்டியது திரிந்து வந்தது.

## 5.9 தொகுப்புரை

பெயரெச்சம், அறுவகைப்பெயர்களுள் ஒன்றைக் கொண்டு முடியும். இடைநிலை மற்றும் விகுதியால் காலம் உணர்த்தும். ‘செய்யும்’ என்னும் வாய்பாடு ஈறுதிரிந்து வருவது உண்டு.

வினையெச்சம், பல வாய்பாடுகளையும் சொல் வடிவங்களையும் பெற்றுவரும். தம் வினைமுதல் வினையாலும், பிற வினைமுதல் வினையாலும் முடிவுபெறும். முற்றுச் சொல் எச்சப்பொருள் தருவதும் உண்டு.

இருவகை எச்சங்களும் எதிர்மறைப் பொருள்தரல், அடுக்கி வரல், இடைப்பிறவரல் ஆகிய இயல்புடையனவாகும்.

இவற்றை இப்பாடம் விளக்கியிருக்கிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் 6

# A02126 காலம்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

காலத்தின் வகைகள் பற்றி இந்தப் பாடம் எடுத்துக் கூறுகின்றது. வினைமுற்றுச் சொற்கள் காலம் காட்டும் முறைகள் பற்றி விளக்கிக் கூறுகின்றது. எச்சச் சொற்கள் எவ்வெவ்வாறு காலம் காட்டுகின்றன என விவரிக்கின்றது. கால மயக்கங்கள் குறித்துத் தெளிவுபடுத்துகின்றது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- ஒரு வினைச்சொல் எந்தக் காலத்தைக் காட்டுகின்றது எனத் தெரிந்து கொள்ளலாம்.
- விகுதிகள் காலம் காட்டும் முறைகளை அறிந்து பழைய பாடல்களுக்குப் பொருள் உணர்ந்து கொள்ளலாம்.
- வினையாலணையும் பெயர்கள் காலம் காட்டும் முறைகளை அறியலாம்.
- காலங்கள் ஒன்றுக்கு ஒன்று எவ்வெப் பொருள்களில் மயங்கி வரும் எனத் தெளிந்து, பயன்படுத்தலாம்.

# பாட அமைப்பு

6.0 பாடமுன்னுரை

6.1 காலம்

6.2 வினைமுற்று காலம் காட்டுதல்

6.3 வினையாலணையும் பெயர் காலம் காட்டுதல்

6.4 பெயரெச்சம் காலம் காட்டுதல்

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

6.5 வினையெச்சம் காலம் காட்டுதல்

6.6 காலமயக்கம்

6.7 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 6.0 பாட முன்னுரை

பெயர்ச்சொல், ஒரு பொருளின் தன்மையைச் சுட்டுகின்றது. வினைச்சொல், ஒரு பொருளின் செயலைச் சுட்டுகின்றது. காலம் என்பது செயல் நிகழும் பொழுதைச் சுட்டுகின்றது.

காலத்தின் வகைகளையும், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர் ஆகியன காலம் காட்டும் முறைகளையும், கால மயக்கங்களையும் குறித்து இந்தப் பாடத்தில் காணலாம்.

# 6.1 காலம்

வினைச்சொல் செயல் நிகழ்வையும், அது நிகழும் காலத்தையும் உணர்த்தும் என்பதை அறிவீர்கள். செயல் நிகழ்ந்து முடிந்ததா? நிகழ்ந்து கொண்டுள்ளதா? நிகழ உள்ளதா? என்பதனை, வினைச்சொல்லின் காலம் காட்டும் தன்மையால் அறியலாம்.

## 6.1.1 காலத்தின் வகைகள்

காலம் மூன்று வகைப்படும். அவை, இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவாகும்.

- இறந்தகாலம்

செயல் நிகழ்ந்து முற்றுப் பெற்றதைக் குறிப்பது இறந்தகாலம் எனப்படும்.

(எ.கா) உண்டான்.

இது, உண்ணுதலாகிய செயல் நிகழ்ந்து முற்றுப் பெற்றதைக் குறிக்கின்றது.

- நிகழ்காலம்

செயல் தொடங்கி, முற்றுப் பெறாத நிலை நிகழ்காலம் ஆகும். செயல் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது இதன் பொருளாகும்.

(எ.கா) உண்கின்றான்.

இது, உண்ணுதல் தொழில், தொடங்கப் பெற்று, முற்றுப்பெறாமல் நிகழ்ந்து கொண்டுள்ளது. ஆதலின், இது நிகழ்காலம் உணர்த்துகின்றது.

- எதிர்காலம்

செயல் தொடங்கப் பெறாத நிலை எதிர்காலம் எனப்படும். செயல் இனி நிகழ உள்ளது எனச் சுட்டுவது இதன் நிலையாகும்.

(எ.கா) உண்பான்

இது, உண்ணுதல் செயல் நிகழாத நிலையை, இனி நிகழ உள்ள நிலையைச் சுட்டுகின்றது. ஆகவே, இது எதிர்காலச் சொல்லாகும். இவற்றைக் குறித்து,

இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே (382)
என நன்னூல் உரைக்கும்.
(இறப்பு – இறந்தகாலம்; எதிர்வு – எதிர்காலம்)

## 6.1.2 காலம் காட்டும் சொல் வகைகள்

வினைச்சொல் வகைகளாகிய வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகியன காலம் காட்டும் இயல்புடையனவாகும்.

பெயர்ச்சொல் வகையுள் வினையாலணையும் பெயர் மட்டும் காலம் காட்டுவதாகும்.

(எ.கா)

வினைமுற்று – முருகன் வந்தான்
பெயரெச்சம் – வந்த முருகன்
வினையெச்சம் – வந்து சென்றான்
வினையாலணையும் பெயர் – வந்தவனைக் கண்டேன்
இவற்றைக் குறித்து இனி விரிவாகக் காண்போம்.

## 6.2 வினைமுற்று காலம் காட்டுதல்

வினைச்சொல்லின் இன்றியமையாத பண்பு, 'காலம் காட்டுதல்' ஆகும். இதனை,

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

(தொல்.சொல்.198)

எனத் தொல்காப்பிய நூற்பா குறிக்கும்.

வினைச்சொல் வகைகளில் பெரும்பங்கு வகிப்பது வினைமுற்று ஆகும். எனவே, வினைமுற்று காலம் காட்டுதலை முதலில் தெரிந்து கொள்வோம்.

இடைநிலை, பகுதி, விகுதி ஆகியவற்றுள் ஒன்றால் வினைமுற்று காலம் காட்டி நிற்கும்.

### 6.2.1 இடைநிலை காலம் காட்டுதல்

வினைமுற்றுச் சொல், பெரும்பாலும் இடைநிலையால் காலம் காட்டும் இயல்புடையதாகும்

வினைப்பகுதி, காலம் காட்டும் இடைநிலை, பால்காட்டும் விகுதி என்பதாக வினைமுற்றின் பகுபத உறுப்பிலக்கணம் அமையும்

(எ.கா) உண்டான் – உண்+ட்+ஆன்
உண் – வினைப்பகுதி
ட் – காலம் காட்டும் இடைநிலை
ஆன் – படர்க்கை உயர்திணை ஆண்பால் வினைமுற்று விகுதி
காலம் காட்டும் இடைநிலை, இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவானதாக அமையும்.

தன்மை ஒருமை – உண்டேன்
தன்மைப் பன்மை – உண்டோம்
முன்னிலை ஒருமை – உண்டாய்
முன்னிலைப் பன்மை – உண்டீர்
படர்க்கை ஆண்பால் – உண்டான்
படர்க்கைப் பெண்பால் – உண்டாள்
படர்க்கைப் பலர்பால் – உண்டார்
படர்க்கை ஒன்றன்பால் – உண்டது
படர்க்கைப் பலவின்பால் – உண்டன
என வந்தனவற்றுள் 'ட்' இடைநிலை இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாக வந்துள்ளதைக் காண்க.

• இறந்தகாலம் காட்டுவன

த், ட், ற், இன் ஆகிய நான்கும் இறந்த காலம் காட்டும் இடைநிலைகள் ஆகும்.

தடறஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து

இறந்த காலம் தரும்தொழில் இடைநிலை **(142)**
என்பது நன்னூல்.

(எ.கா)

த் – செய்தான் (செய்+த்+ஆன்)
ட் – உண்டான் (உண் + ட் + ஆன்)
ற் – தின்றான் (தின்+ற்+ஆன்)
இன் – தாவினான் (தாவு+இன்+ஆன்)

• நிகழ்காலம் காட்டுவன

ஆநின்று, கின்று, கிறு என்னும் மூன்றும் நிகழ்காலம் காட்டும் இடைநிலைகளாகும்.

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை
(143)

(நிகழ்பொழுது – நிகழ்காலம்; அறை – கூறு)
என்பது நன்னூல்.

(எ.கா)
ஆநின்று – உண்ணாநின்றான்
கின்று – உண்கின்றான்
கிறு – உண்கிறான்
இவற்றுள், ‘ஆநின்று’ இடைநிலை இன்றைய வழக்கில் இல்லை.

• எதிர்காலம் காட்டுவன

ப், வ் என்பன எதிர்காலம் காட்டும் இடைநிலைகள் ஆகும்.

பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலை யாம்; இவை சிலஇல

**(நன்-144)**
(எதிர்பொழுது – எதிர்காலம்; இசை – கூறு; இவை சில இல – இந்த இடைநிலைகள் இல்லாத இடங்களில் பகுதியோ விகுதியோ காலம் காட்டும்)

(எ.கா) ப் – உண்பான் (உண்+ப்+ஆன்)
வ் – செல்வான் (செல்+வ்+ஆன்)

### 6.2.2 பகுதி காலம் காட்டுதல்

இடைநிலை இடம்பெறாத நிலையில், பகுதியானது தனித்துநின்றோ, விகுதியுடன் சேர்ந்த நிலையில் இரட்டித்து நின்றோ காலம் காட்டும்.

• தனித்து நின்று காலம் காட்டல்

முன்னிலை விகுதியுடன் பொருந்தி, எதிர்காலப் பொருளுடையதாக வரும் பகுதி, சில இடங்களில் அவ்விகுதி குறைந்து, தனித்துநின்று அதே பொருள் தருவது உண்டு.

(எ.கா) உண்ணாய் – உண்
நடவாய் – நட
இப்பகுதிகள் தனித்துநின்ற போதிலும், முன்னிலை விகுதி குறைந்தனவாய், எதிர்காலம் காட்டுவனவாகவே கருதப்படும். முன்னிலை ஒருமை ஏவலாக வரும் வினைப்பகுதிகளே இவ்வாறு எதிர்காலம் காட்டும்.

• இரட்டித்து நின்று காலம் காட்டடல்

இடைநிலை இல்லாது பகுதியின் ஒற்று (மெய்) இரட்டித்து இறந்தகாலம் காட்டுவது உண்டு.

தனிக்குறிலை அடுத்து கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யும் வரும் வினைப் பகுதி சில ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டும்.

(எ.கா) புகு – புக்கான்
தொடு – தொட்டான்
பெறு – பெற்றான்

### 6.2.3 விகுதி காலம் காட்டுதல்

தன்மை ஒருமை, தன்மைப் பன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களில் இடம்பெறும் சில விகுதிகள் காலம் காட்டுவனவாகும். வியங்கோள் விகுதிகளும், செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதியும் காலம் காட்டும் இயல்புடையனவாகும்.

(1) தன்மை ஒருமை விகுதி

கு, டு, து, று என்னும் தன்மை ஒருமை விகுதிகள் காலம் காட்டும்.

‘கு’ எதிர்காலம் காட்டும். ‘டு’ இறந்த காலம் காட்டும். ‘து’, ‘று’ ஆகியன இறந்தகாலம், எதிர்காலம் ஆகிய இரண்டையும் காட்டுவனவாகும்.

(எ.கா)
கு – உண்கு யான் (உண்பேன்) – எதிர்காலம்
டு – உண்டு யான் (உண்டேன்) – இறந்தகாலம்
து – வந்து யான் (வந்தேன்) – இறந்தகாலம்
- வருது யான் (வருவேன்) – எதிர்காலம்
று – சென்று யான் (சென்றேன்) – இறந்தகாலம்
- சேறு யான் (செல்வேன்) – எதிர்காலம்
காலம் காட்டும் இவ்விகுதிகள், இன்றைய வழக்கில் இல்லை.

(2) தன்மைப் பன்மை விகுதி

கும், டும், தும், றும் எனும் தன்மைப் பன்மை விகுதிகள் காலம் காட்டும்.

‘கும்’ எதிர்காலம் காட்டும், ‘டும்’ இறந்த காலம் காட்டும். ‘தும்’, ‘றும்’ என்பன இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் காட்டுவனவாகும்.

(எ.கா)

கும் – உண்கும் யாம் (உண்போம்) – எதிர்காலம்
டும் – உண்டும் யாம் ( உண்டோம்) – இறந்தகாலம்
தும் – வந்தும் யாம் ( வந்தோம்) – இறந்தகாலம்
- வருதும் யாம் (வருவோம்) – எதிர்காலம்
றும் – சென்றும் யாம் (சென்றோம்) – இறந்த காலம்
- சேறும் யாம் (செல்வோம்) – எதிர்காலம்
இந்த நான்கு விகுதிகளும் இன்றைய வழக்கில் இல்லை.

(3) முன்னிலை விகுதி

முன்னிலை ஒருமையில் இடம்பெறும் இகர விகுதியும், பன்மையில் இடம்பெறும் மின் விகுதியும் எதிர்காலம் காட்டி நிற்பனவாகும்.

(எ.கா)

இ – சேறி (செல்வாய்) – செல்+தி-சேல்+தி-சேறி.
மின் – காண்மின் (காணுங்கள்)
இவை மட்டுமின்றி, ‘ஆய்’ என்னும் ஒருமை விகுதியும், ‘உம்’ என்னும் பன்மை விகுதியும் எதிர்காலம் உணர்த்துவனவாகும்.

(எ.கா) ஆய் – வாராய் (வருவாயாக)
உம் – வாரும் (வாருங்கள்)
(4) வியங்கோள் விகுதி

க, இய, இயர் என்னும் வியங்கோள் விகுதிகள் எதிர்காலம் காட்டிவரும்.

(எ.கா) க – வாழ்க தமிழ்
இய – வாழிய தமிழ்
இயர் – வாழியர் தமிழர்
(5) படர்க்கை விகுதி

‘ப‘ என்னும் உயர்திணைப் படர்க்கைப் பலர்பால் விகுதி இறந்த காலமும் எதிர்காலமும் காட்டுவதாகும். ‘மார்’விகுதி எதிர்காலம் காட்டும்.

(எ.கா) ப – உண்ப (உண்டார்) – இறந்தகாலம்
என்ப (என்பார்) – எதிர்காலம்
மார் – உண்மார் (உண்பார்) எதிர்காலம்
(6) செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி

‘செய்யும்’ என்னும் வாய்பாட்டு வினைமுற்றில் உள்ள ‘உம்’ விகுதி நிகழ்காலமும், எதிர்காலமும் உணர்த்தும். படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின் பால் ஆகியவற்றில் மட்டுமே இது இடம்பெறும்.

(எ.கா)

படர்க்கை ஆண்பால் – அவன் உண்ணும்
(உண்கிறான்) – (உண்பான்)

படர்க்கைப் பெண்பால் – அவள் உண்ணும்
(உண்கிறாள்) – (உண்பாள்)
படர்க்கை ஒன்றன்பால் – அது உண்ணும்
(உண்கின்றது) – (இனி உண்ணும்)
படர்க்கைப் பலவின்பால் – அவை உண்ணும்
(உண்கின்றன) – (இனி உண்ணும்)
(7) எதிர்மறைவினை முக்காலமும் காட்டல்

எதிர்மறை வினைமுற்றில் வரும் 'ஆ' எனும் விகுதி குறிப்பிட்ட காலத்தைக் காட்டுவதில்லை. எனவே, முக்காலத்திற்கும் உரியதாகக் கருதப்படுகின்றது.

(எ.கா) குதிரைகள் உண்ணா (இருந்தன, இருக்கின்றன, இருக்கும்)

### 6.2.4 குறிப்பால் காலம் காட்டுதல்

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், குறிப்பாகச் சுட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் இது பிறக்கும்.

(எ.கா) பண்பு – சாத்தன் கரியன்
பொருள் – சாத்தன் பொன்னன்
சாத்தன் நேற்று கரியன், இன்று கரியன், நாளை கரியன் என முறையே இறந்தகாலமும், நிகழ்காலமும், எதிர்காலமும் உணர்த்திவரும்.

## 6.3 வினையாலணையும் பெயர் காலம் காட்டுதல்

பெயர்ச்சொல் காலம் காட்டாது. ஆனால் வினையாலணையும் பெயர் மட்டும் காலம் காட்டும்.

வினையாலணையும் பெயர், பெயர்ச்சொல்லைப் போன்று வேற்றுமை உருபு ஏற்கும். வினைச்சொல்லைப் போன்று காலம் காட்டும்.

செயலைக் குறிப்பதுடன், செய்தவனையும் குறிப்பது வினையாலணையும் பெயரின் இயல்பாகும்.

(எ.கா) வந்தானைக் கண்டேன்
வந்தவன் சென்றான்
வினையாலணையும் பெயர், வினைமுற்றைப் போலவே இருதிணை ஐம்பால் சொற்களில் காலம் காட்டுவது ஆகும்.

## 6.4 பெயரெச்சம் காலம் காட்டுதல்

வினைப்பகுதி, காலம் காட்டும் இடைநிலை, பெயரெச்ச விகுதி ஆகியவற்றைக் கொண்டதாகப் பெயரெச்சம் அமையும். ‘செய்த’ என்னும் வாய்பாடு இறந்தகாலம் காட்டும். ‘செய்கின்ற’ என்னும் வாய்பாடு நிகழ்காலம் காட்டும். ‘செய்யும்’ என்னும் வாய்பாடு எதிர்காலம் காட்டும்.

### 6.4.1 இறந்தகாலப் பெயரெச்சம்

த், ட், ற், இன் ஆகிய இடைநிலைகள் கொண்டு இறந்தகாலப் பெயரெச்சம் அமையும்.

(எ.கா) த் – படித்த பாடம்
ட் – உண்ட சோறு
ற் – சென்ற சாத்தன்
இன் – போயின போக்கு

### 6.4.2 நிகழ்காலப் பெயரெச்சம்

நிகழ்காலப் பெயரெச்சம், கிறு, கின்று, ஆநின்று என்னும் இடைநிலைகளால் காலம் காட்டும்.

(எ.கா) கிறு – உண்கிற சாத்தன்
கின்று – உண்கின்ற சாத்தன்
ஆநின்று – உண்ணாநின்ற சாத்தன்

### 6.4.3 எதிர்காலப் பெயரெச்சம்

எதிர்காலப் பெயரெச்சம், ‘செய்யும்’ என்னும் வாய்பாட்டில் அமையும். அது, ‘உம்’ என்னும் விகுதியால் எதிர்காலம் காட்டும்.

(எ.கா) படிக்கும் சிறுவன்
பாடும் சிறுமி
வரும் வண்டி

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 6.5 வினையெச்சம் காலம் காட்டுதல்

வினையெச்சம், செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஒன்பது வாய்பாடுகளில் அமையும். வான், பான், பாக்கு ஆகிய விகுதிகளைப் பெற்றும் வரும்.

இவை பன்னிரண்டனுள் முதல் ஐந்தும் இறந்தகாலம் காட்டும்; அடுத்துள்ள ஒன்று நிகழ்காலம் காட்டும்; ஏனைய ஆறும் எதிர்காலம் காட்டுவனவாகும்.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்குஇன வினையெச் சம்பிற
ஐந்துஒன்று ஆறுமுக் காலமும் முறைதரும் (343)
என்பது நன்னூல். (விளக்கம்: பாடம் 5 (a02125) – 5.5, 5.6 காண்க)

### 6.5.1 இறந்தகால வினையெச்சம்

(1) செய்து – ஓடி வந்தான் (இகர ஈறு)
- வந்து சென்றான் (உகர ஈறு)
- போய் வந்தான் (யகரமெய் ஈறு)
(2) செய்பு – உண்குபு வந்தான் (உண்டு)
(3) செய்யா – உண்ணாச் சென்றான் (உண்டு)
(4) செய்யூ – உண்ணூச் சென்றான் (உண்டு)
(5) செய்தென – உண்டெனச் சென்றான் (உண்டு)
6.5.2 நிகழ்கால வினையெச்சம்

‘செய’ என்னும் வாய்பாடு நிகழ்காலம் சுட்டி வரும் என நன்னூல் குறிப்பிடுகின்றது. இவ்வாய்பாடு முக்காலத்திலும் இடம்பெறும் என உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

செய – (1) ‘கொற்றன் வெள்ளி முளைக்க வந்தான்’

இங்கு, வருதலும் முளைத்தலும் ஒரேகாலத்தில் நிகழ்ந்தன.

இது நிகழ்காலம் காட்டிற்று.

(2) ‘மழைபெய்ய நெல் விளைந்தது’

காரணப் பொருள் உடையதால் இறந்தகாலம் காட்டிற்று. மழை பெய்த காரணத்தால் நெல் விளைந்தது என்பது காரணப்பொருள்.

(3) ‘நெல் விளைய மழை பெய்தது’

காரியப் பொருள் உடையதாய் எதிர்காலம் காட்டிற்று. நெல் விளைவதற்காக மழைபெய்தது என்பதால் காரியப் பொருள் ஆயிற்று.

### 6.5.3 எதிர்கால வினையெச்சம்

(1) செயின் – மழைவரின் குடை பிடிப்போம். (வந்தால்)
(2) செய்யிய – மழை பெய்யிய மரம் வளர்ப்போம். (பெய்வதற்கு)
(3) செய்யியர் – மழை பெய்யியர் மரம் வளர்ப்போம். (பெய்வதற்கு)
(4) வான் – மழை பெய்வான் மரம் வளர்ப்போம். (பெய்ய)
(5) பான் – மழை காண்பான் மரம் வளர்ப்போம். (காண)
(6) பாக்கு – மழை வருபாக்கு மரம் வளர்ப்போம். (வர)

### 6.5.4 வாய்பாடு மாற்றம்

'செய' என்னும் வாய்பாட்டுச் சொற்கள், 'செய்து' என்னும் வாய்பாட்டு வடிவிலும், 'வான்' ஈற்று விகுதி வடிவிலும் வருவது உண்டு. இவற்றில் வடிவம் மாறினாலும் பொருள் மாறுவது இல்லை. அதாவது அவை உணர்த்தும் காலம் மாறுவதில்லை.

(எ.கா)
(1) செய – செய்து

(1) ஞாயிறு பட்டு வந்தான் (ஞாயிறு பட வந்தான் என்பது பொருள் – நிகழ்காலம்)

2. செய – 'வான்' ஈறு

யான் கொள்வான் பொருள் கொடுத்தான்
(யான் கொள்ளப் பொருள் கொடுத்தான் என்பது பொருள் – நிகழ்காலம்)

## 6.6 கால மயக்கம்

ஒரு காலத்திற்கு உரிய சொல் வரவேண்டிய இடத்தில், வேறு ஒரு காலத்திற்கு உரிய சொல் வருதல், கால மயக்கம் எனப்படும். (மயங்குதல் – கலந்து வருதல்)

கால மயக்கத்தை இறந்தகாலத்தில் மயங்குவன, நிகழ்காலத்தில் மயங்குவன, எதிர்காலத்தில் மயங்குவன என மூவகைப்படுத்தலாம்.

### 6.6.1 இறந்தகாலத்தில் மயங்குவன

விரைவு, இயற்கை, தெளிவு ஆகியவற்றின் காரணமாகவும், வழக்கு நிலையிலும் ஏனைய காலங்கள் இறந்தகாலத்தில் மயங்கிவரும்.

- விரைவுப்பொருள்

எதிர்காலத்திலும் நிகழ்காலத்திலும் வரவேண்டிய சொற்களை விரைவுப்பொருள் கருதி, இறந்தகாலச் சொல்லால் குறிப்பிடுவது உண்டு.

உணவு உண்டு கொண்டிருப்பவன், தன் வருகையை எதிர்நோக்கி அருகில் காத்திருக்கும் நண்பனிடம் ‘உண்டேன்; வந்தேன்’ என்கின்றான். ‘உண்கின்றேன்; வருவேன்’ என்று சொல்ல வேண்டியவன் விரைவு கருதி இவ்வாறு கூறுகின்றான். இன்னும் உணவு உண்ணத் தொடங்காத ஒருவனும் இவ்வாறான சூழலில் ‘உண்டேன்; வந்தேன்‘ என்கின்றான். ‘உண்பேன்; வருவேன்‘ எனச் சொல்ல வேண்டியவன் விரைவுப் பொருள் காரணமாக மாற்றி உரைப்பது ஏற்கப்படுகின்றது.

- உலக வழக்கு

எதிர்காலச் சொல், உலக வழக்கில் இறந்தகாலச் சொல்லால் சுட்டப்படுவது உண்டு.

‘நாளை அவன் வந்தால் நீ என்செய்வாய்’ என்பது இதற்கான சான்றாகும். வருவனேல் என எதிர்காலச் சொல்லில் வர வேண்டியது, ‘வந்தால்‘ என இறந்தகாலச் சொல்லாக இடம்பெற்றுள்ளது.

### 6.6.2 நிகழ்காலத்தில் மயங்குவன

முக்காலத்திற்கும் உரிய பொருளின் தன்மை, மிகுதி, இயற்கை, தெளிவு, உலகவழக்கு ஆகிய நிலைகளில் ஏனைய காலச் சொற்கள் நிகழ்காலத்தில் வரும்.

- முக்கால வினைச்சொல்

செயல்நிகழும் காலத்தின் அடிப்படையில் பொருள்களின் இயக்கத்தை மூன்று காலங்களுள் ஒன்றில் அமைத்துக் கூறுகின்றோம். ஆனால், மூன்று காலத்திற்குமான செயல்களையுடைய பொருள்களின் நிலையை எக்காலத்தில் வைத்துக் கூறுவது?

மலை இருக்கின்ற தன்மை மூன்று காலத்திற்கும் உரியது. மலை இருந்தது, மலை இருக்கின்றது, மலை இருக்கும் என மூன்று காலத்திலும் அமையும். அதன் நிலையை ஒரு வாய்பாட்டால் சொல்ல வேண்டுமானால் என்ன செய்வது?

நிகழ்காலச் சொல்லில் அமைத்துக் கூறினால், அது ஏனைய காலங்களையும் உள்ளடக்கி நிற்பதாக அமையும்,

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே (நன்.383)

(ஒத்தியல் – ஒத்து அமைகின்ற; செப்புவர் – கூறுவர்)

(எ.கா) மலை இருக்கின்றது

ஆறு ஓடுகின்றது

### 6.6.3 எதிர்காலத்தில் மயங்குவன

இறந்தகாலச் சொல் உலக வழக்கில் எதிர்காலச் சொல்லாக மயங்கிவரும்.

'நான் சிறுவயதில் இம்மரத்தடியில் அமர்ந்து படிப்பேன்'- இங்கு, 'படித்தேன்' என இறந்தகாலத்தில் வரவேண்டியது, 'படிப்பேன்' என எதிர்காலச் சொல்லாக மயங்கி வந்தது.

## 6.7 தொகுப்புரை

காலம், வினைச்சொல்லின் சிறப்பிலக்கணமாக அமைகின்றது. வினையடியாகப் பிறக்கும் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகியன காலம் காட்டுகின்றன.

பெயர்ச்சொல் வகையுள் வினையாலணையும் பெயர் மட்டும் காலம் காட்டுகின்றது. அதன் இயல்பு வினைமுற்றை ஒத்து உள்ளது.

இடைநிலையே காலம் காட்டும் பொறுப்பேற்கின்றது. சிறுபான்மை, பகுதி காலம் காட்டுதலும் உண்டு. விகுதி காலம் காட்டுதல் பழங்காலத்தில் இருந்தது; இன்றைய வழக்கில் இல்லை.

முக்காலச் சொற்களும் சிற்சில காரணங்களால் தங்களுக்குள் மயங்கி வருதல் உண்டு.

இக்கருத்துகளைப் பற்றி இந்தப் பாடத்தில் தெளிவாக அறிந்து கொண்டோம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# A02121 தன் மதிப்பீடு : விடைகள் - I

1.வினைமுற்றுச்சொல் எந்த ஆறு பொருள்களைத் தரும்?

**விடை:** 1. செய்பவன்
2. கருவி
3. நிலம்
4. செயல்
5. காலம்
6. செய்பொருள்

2.‘கரியன்’ என்னும் சொல் தனியே வந்தால் குறிப்புவினை ஆகுமா?

**விடை:** ‘கரியன்’ என்பது தனியே வந்து குறிப்புவினை ஆகாது. ‘அவன் கரியன்’ என்பது போல் தொடரில் பயனிலையாக வந்தால்தான் குறிப்புவினை ஆகும்.

3.குறிப்பு வினைச் சொற்கள் எவற்றின் அடியாகத் தோன்றும்?

**விடை:** பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடியாகக் குறிப்புவினைகள் தோன்றும்.

4.பிறவினைக்குரியனவாக நீவிர் அறியும் நான்கு சொற்களை எழுதுக.

**விடை:** உருட்டினான்
ஓட்டினான்
வருத்தினான்
அடக்கினான் என்பன பிறவினைச் சொற்கள்.

5.செயப்பாட்டுவினைத் தொடரில் வினை செய்பவர் பெயர் எவ்வாறு வரும் என்பதற்கு ஒரு சான்று தருக.

**விடை:** மூன்றாம் வேற்றுமை ‘ஆல்’ உருபைச் சேர்த்து, செயப்பாட்டு வினையில் எழுவாயைக் குறிக்கிறோம்.

(எ.கா) எலி பூனையால் துரத்தப்பட்டது.

6.உடன்பாட்டு வினைக்கும், எதிர்மறை வினைக்கும் சில எடுத்துக்காட்டுகள் தருக.

**விடை:** செய்வேன் (உடன்பாடு) – செய்யேன் (எதிர்மறை)
வருவான் (உடன்பாடு) – வாரான் (எதிர்மறை)
கேட்பான் (உடன்பாடு) – கேளான் (எதிர்மறை)
ஓடும் (உடன்பாடு) – ஓடா (எதிர்மறை)

முன்

# A02121 தன் மதிப்பீடு : விடைகள் - II

1.வியங்கோள் வினை எவ்வெப் பொருள்களில் வரும்?

**விடை:** 1. வாழ்த்தல்
2. விதித்தல்
3. வேண்டல்
4. வைதல்

2.காலம் காட்டும் தொழிற்பெயர்கட்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

**விடை:** நீங்கள் பாடியது நன்றாக இருந்தது.
அவன் வந்தது மகிழ்வளித்தது.

3.வினையாலணையும் பெயர், குறிப்புவினையிலிருந்து அமையுமா? அமையும் எனில் சான்று தருக.

**விடை:** குறிப்புவினையிலிருந்து வினையாலணையும் பெயர் அமையும்.
(எ.கா) கரியானைக் கண்டேன்.
இதில் கரியான் என்பது வினையாலணையும் பெயர்.

4.வினைப் பகுதியிலிருந்து தொழிற்பெயர் அமைவதற்குச் சான்றுகள் தருக.

**விடை:** 'ஓடு' (வினைப்பகுதி) – 'ஓட்டம்' (தொழிற்பெயர்)
'ஆடு' (வினைப்பகுதி) – 'ஆட்டம்' (தொழிற்பெயர்)
'வாடு' (வினைப்பகுதி) – 'வாட்டம்' (தொழிற்பெயர்)

முன்

# A02122 தன் மதிப்பீடு : விடைகள் - I

1.தன்மை வினைமுற்று என்றால் என்ன? ஒரு சான்று தருக.

**விடை:** பேசுபவனுடைய செயலைக் குறிப்பது தன்னை வினைமுற்று எனப்படும்.

சான்று : வருகிறேன்

2.தன்மை வினைமுற்று விகுதிகளால் அறியப்படுவன யாவை?

**விடை:** தன்மை வினைமுற்று விகுதிகளால் 'தன்மை' இடமும் ஒருமையா அல்லது பன்மையா என்பதும் அறியப்படுவன ஆகும்.

3.தன்மை ஒருமை வினைமுற்றுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

**விடை:** (எ.டு) : உண்டேன்
வாழ்கிறேன்

4.இன்றைய பேச்சு வழக்கில் மிகுதியாக வழங்கப்பெறும் தன்மை ஒருமை விகுதி யாது? சான்று தருக.

**விடை:** 'ஏன்' விகுதி – சான்று : படித்தேன், எழுதினேன்

5.தன்மை ஒருமை-குறிப்பு வினைமுற்றுச் சொற்கள் இரண்டு எழுதுக.

**விடை:**
யான் கவிஞன் இவை தன்மை ஒருமை
குறிப்பு வினைமுற்றுச்
சொற்கள்
யான் செல்வன்

முன்

# A02122 தன் மதிப்பீடு : விடைகள் - II

1.தன்மைப் பன்மை வினைமுற்றுகளுக்குரிய விகுதிகள் யாவை?

விடை: அம், ஆம், எம், ஏம், ஓம்.

2.தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்றுக்கு இரண்டு சான்றுகள் தருக.

விடை: கரியம் யாம்
நல்லம் யாம்

3.காலம் காட்டும் தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் யாவை? சான்று தருக.

விடை: ‘கு’ – உண்கு யான்
‘டு’ – கண்டு யான்
‘து’ – செய்து யான்
‘று’ – சென்று யான்

4.தன்மைப் பன்மைக்குரிய எதிர் காலம் காட்டும் விகுதிகள் எவை? சான்று தருக.

விடை: ‘கும்’ – தின்கும் யாம் (தின்போம் யாம்)
‘தும்’ – சொல்லுதும் யாம் (சொல்வோம் யாம்)
‘றும்’ – சேறும் யாம் (செல்வோம் யாம்)

5.இறந்தகாலம் உணர்த்தும் தன்மைப் பன்மை விகுதிகளில் இரண்டனைச் சான்றுடன் எழுதுக.

விடை: ‘டும்’ – கண்டும் யாம் (கண்டோம் யாம்)
‘தும்’ – வந்தும் யாம் (வந்தோம் யாம்)
‘றும்’ – வென்றும் யாம் (வென்றோம் யாம்)

முன்

# A02123 தன் மதிப்பீடு : விடைகள் - I

1.முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் யாவை?

**விடை:** ஐ, ஆய், இ என்பன முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளாகும்.

2.முன்னிலை ஒருமை வினைமுற்றுகள் எவ்வெப் பால்களுக்கு உரியன?

**விடை:** உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகிய மூன்றற்கு உரியன.

3.முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்றுச் சொற்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.

**விடை:** நல்லாய், நல்லை

4.முன்னிலைப் பன்மை வினைமுற்றுகள் எந்த இரண்டு பால்களைச் சுட்டும்?

**விடை:** உயர்திணையில் பலர்பால், அஃறிணையில் பலவின்பால் ஆகிய இரண்டு பால்களைச் சுட்டும்.

5.முன்னிலைப் பன்மைக்குரிய தெரிநிலை வினைமுற்று விகுதிகள் யாவை?

**விடை:** இர், ஈர் என்பன முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகளாகும்.

6.‘நீவிர் நல்லீர்’ எனும் தொடருக்குரிய பொருள் யாது?

**விடை:** நீங்கள் நல்லவர்கள் என்று பொருள்.

7.படர்க்கையை உளப்படுத்தும் முன்னிலைப் பன்மை என்றால் என்ன?

**விடை:** முன்னிலையில் உள்ளவரையும், படர்க்கையாரையும் சேர்த்து ஒரே வினைமுற்றால் குறிக்கும்பொழுது ‘நீர் வந்தீர்’ என அமையும் தொடரைப் படர்க்கையை உளப்படுத்தும் முன்னிலைப் பன்மை என்று கூறுகிறோம்.

முன்

# A02123 தன் மதிப்பீடு : விடைகள் - II

1.முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்றுகளுக்குரிய விகுதிகள் யாவை?

**விடை:** ஐ, ஆய், இ.

2.ஏவல் வினை எந்தக் காலத்தையாவது சுட்டுமா?

**விடை:** சுட்டாது, இருப்பினும் அது எதிர்காலத்திற்குரியது.

3.முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றுகளுக்கான விகுதிகளைக் குறிப்பிடுக.

**விடை:** இர்,ஈர்,மின்.

4.வியங்கோள் என்பதற்குரிய பொருள் யாது?

**விடை:** ஏவல் அல்லது கட்டளையை ஏற்றது வியங்கோள்.

5.வியங்கோள் வினை முன்னிலைக்கு மட்டும் உரியதா?

விடை: இல்லை. மூவிடத்திற்கும் உரியது.

6.வியங்கோள் வினை எவ்வெப் பொருள்களில் வரும்?

**விடை:** வாழ்த்தல், வைதல், விதித்தல், வேண்டல் பொருள்களில் வரும்.

7.வியங்கோள் வினை விகுதிகளுள் இரண்டினை எழுதுக.

**விடை:** க, ய (வாழ்க, வாழிய).

8.ஏவல் வினைக்கும், வியங்கோள் வினைக்கும் இடையே வேறுபாடுகளாக நீவிர் அறிவன யாவை?

**விடை:** ஏவல் வியங்கோள்
1. கட்டளைப் பொருள் வாழ்த்தல் முதலிய 4 பொருள்
2. முன்னிலைக்கு மட்டும் மூன்று இடத்திற்கும் உரியது
3. ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை

முன்

# A02124 தன் மதிப்பீடு : விடைகள் - I

1.படர்க்கை வினைமுற்றுச் சொற்களின் விகுதிகள் எவற்றை உணர்த்தும்?

விடை: திணை,பால்,எண், இடம் ஆகியவற்றை உணர்த்தும்.

2.படர்க்கை ஆண்பால் வினைமுற்றுகளில் வரும் விகுதிகள் யாவை?

விடை: அன், ஆன்.

3.படர்க்கை ஆண்பால் குறிப்பு வினைமுற்றுக்குச் சில எடுத்துக் காட்டுகள் தருக.

விடை: அவன் புதுவையான்
அவன் நல்லன்

4.படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதியாக ‘இ’ வருமா?

விடை: வராது.

5.படர்க்கைப் பெண்பால் தெரிநிலை வினைமுற்று முக்காலத்திலும் வருவதற்குச் சான்றுகள் தருக.

விடை: இறந்த காலம் – தேவி வந்தாள்
நிகழ் காலம் – தேவி வருகிறாள்
எதிர் காலம் – தேவி வருவாள்

முன்

# A02124 தன் மதிப்பீடு : விடைகள் - II

1.பலர்பால் வினைமுற்று விகுதிகள் யாவை?

விடை: அர், ஆர், ப, மார்.

2.படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதியைப் பயன்படுத்தி இரண்டு தொடர்களை எழுதுக.

விடை: து – மாடு ஓடியது.
று – அது கூரிய கொம்பிற்று (கொம்பை உடையது)
டு – கழி எனும் சொல் மிகுதிப் பொருட்டு
(கழி எனும் சொல் மிகுதி எனும் பொருளை உடையது)

3.பலவின்பால் வினைமுற்று விகுதிகளாக நீவிர் அறிவன யாவை?

விடை: அ, ஆ.

4.'ஆ' எனும் பலவின்பால் வினைமுற்று விகுதி எப்பொருளில் வரும்?

விடை: எதிர்மறைப் பொருளில்.

5.படர்க்கை வினைமுற்று விகுதிகள் அனைத்தையும் தொகுத்து எழுதுக.

விடை: அன், ஆன் = ஆண்பால் வினைமுற்று விகுதிகள்
அள், ஆள் = பெண்பால் வினைமுற்று விகுதிகள்
அர், ஆர், ப, மார் = பலர்பால் வினைமுற்று விகுதிகள்
து, று, டு = ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள்
அ,ஆ = பலவின்பால் வினைமுற்று விகுதிகள்

முன்

# A02125 தன் மதிப்பீடு : விடைகள் - I

1.எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

விடை: வினைப்பகுதி, காலம் காட்டும் இடைநிலை, எச்ச விகுதி ஆகியவற்றைப் பெற்றிருக்கும்; பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்லைக் கொண்டு முடியும். இவ்வாறு வருவது ‘எச்சம்’ எனப்படும்.

அது பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.

2.பெயரெச்சம் எந்தெந்தப் பெயர்களைக் கொண்டு முடியும்?

விடை: பெயரெச்சம் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் ஆறு பெயர்ச் சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

3.செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் இடையில் திரிவதற்கு இரண்டு சான்றுகள் தருக.

விடை: போகும் பொழுது – போம்பொழுது
தாவும் பரி – தாம்பரி (பரி = குதிரை)

4.ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

விடை: எதிர்மறைப் பெயரெச்சத்தில் வரும் ஈற்று உயிர்மெய் (த்+அ=த) மறைந்து வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும்.

(எ.கா) உலவாத் தென்றல் (உலவாத – என்பதில் தகர ஈறு கெட்டது.)

5.பெயரெச்சத்தில் இடைப் பிறவரலுக்குச் சான்று தருக.

விடை: படித்த நூல் – படித்த இலக்கண நூல்.

முன்

# A02125 தன் மதிப்பீடு : விடைகள் - II

1.வினையெச்ச வாய்பாடுகள் யாவை?

**விடை:** செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு ஆகிய பன்னிரண்டும் வினையெச்ச வாய்பாடுகள் ஆகும்.

2.தம் வினைமுதல் வினையும், பிற வினைமுதல் வினையும் கொண்டு முடியும் வினையெச்சங்கள் இரண்டிற்குச் சான்று தருக.

**விடை:** 1. செய – மழை பெய்ய எழுந்தது (தன் வினைமுதல் வினை)
- மழை பெய்யக் குளம் நிறைந்தது (பிற வினைமுதல் வினை)
2. செயின் – மழை பெய்யின் புகழ்பெறும் (தன் வினைமுதல் வினை)
- மழை பெய்யின் புகழ்வர் (பிற வினைமுதல் வினை)

3.எதிர்மறை வினையெச்சம் பற்றி எழுதுக.

**விடை:** வினைப்பகுதி, 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலை, வினையெச்ச விகுதி ஆகியவற்றைக் கொண்டு, வினைச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சம் 'எதிர்மறை வினையெச்சம்' எனப்படும்.

(எ.கா) பார்க்காமல் சென்றான்

4.வினையெச்சத்தில் இடைப்பிறவரலுக்குச் சான்று தருக.

**விடை:** வந்து மகிழ்ந்தான் – வந்து மனம் மகிழ்ந்தான்.

5.முற்றெச்சம் குறித்து எழுதுக.

**விடை:** ஒரு வினைமுற்று, வேறொரு வினைமுற்றைக் கொண்டுமுடியும் பொழுது எச்சப்பொருள் தரும். இது 'முற்றெச்சம்' எனப்படும்.

(எ.கா) கற்றனன் மகிழ்ந்தான் – (கற்று மகிழ்ந்தான்)

முன்

# A02126 தன் மதிப்பீடு : விடைகள் - I

1.காலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**விடை:** காலம் மூன்று வகைப்படும்.

1. இறந்தகாலம் – படித்தான்
2. நிகழ்காலம் – படிக்கின்றான்
3. எதிர்காலம் – படிப்பான்

2.இறந்தகாலம் காட்டும் இடைநிலைகள் யாவை?

**விடை:** த் – வந்தான்
ட் – உண்டான்
ற் – சென்றான்
இன் – கூவினான்

3.தன்மை ஒருமையில் காலம் காட்டும் வினைமுற்று விகுதிகளை எழுதுக.

**விடை:** கு – காண்கு யான் (காண்பேன்) – எதிர்காலம்
டு – கண்டு யான் (கண்டேன்) – இறந்தகாலம்
து – வந்து யான் (வந்தேன்) – இறந்தகாலம்
வருது யான் (வருவேன்) – எதிர்காலம்
று – சென்று யான் (சென்றேன்) – இறந்தகாலம்
சேறு யான் (செல்வேன்) – எதிர்காலம்

4.வினையாலணையும் பெயர் காலம் காட்டுதலைக் குறிப்பிடுக.

**விடை:** வந்தானைக் கண்டேன் – இறந்தகாலம் காட்டுகின்றது,

5.நிகழ்காலப் பெயரெச்சத்திற்கு ஒரு சான்று தருக.

**விடை:** உண்கின்ற சாத்தன்

முன்

# A02126 தன் மதிப்பீடு : விடைகள் - II

1.இறந்தகால வினையெச்ச வாய்பாடுகள் யாவை?

**விடை:** செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் ஐந்தும் இறந்தகால வினையெச்ச வாய்பாடுகள் ஆகும்.

(எ.கா) செய்து – உண்டு வந்தான்

2.‘செய‘ என்னும் வாய்பாட்டின் திரிபுகளைக் கூறுக.

**விடை:** 1) செய – செய்து
ஞாயிறு பட வந்தான் – ஞாயிறு பட்டு வந்தான்
2. செய – ‘வான்’ ஈறு
யான் கொள்ளப் பொருள் கொடுத்தான்
யான் கொள்வான் பொருள் கொடுத்தான

3.முக்காலத்திற்கும் உரிய வினைச்சொல் பற்றி எழுதுக.

**விடை:** முக்காலத்திற்கும் உரிய வினைச்சொல் நிகழ்காலத்தால் கூறப்பெறும்.

(எ.கா) மலை இருக்கின்றது.

4.எதிர்கால வினை, நிகழ்காலத்தில் வந்து மயங்குவதற்குச் சான்று தருக.

**விடை:** பிரதமர் நாளை சென்னை வருகிறார் – இதில் ‘வருவார்’ என வரவேண்டிய வினைமுற்று நிகழ்காலத்தில் மயங்கியது.

முன்